தினபூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 186 வைகாசி 30
Regd. No.CBE/090/2011-2013
கோவை, வெள்ளி, ஜூன் 13, 2025




## முடிவுக்கு வந்தது மோதல்: எலான் மஸ்க்கின் மன்னிப்பை ஏற்று கொண்டார் அதிபர் டிரம்ப்


...2-ம் பக்கம்

## அகமதாபாத் விமான விபத்து: அமித்ஷா, ராகுல் காந்தி, நிர்மலா சீதாராமன் இரங்கல்

...3-ம் பக்கம்

## உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி: முதல் இன்னிங்சில் 138 ரன்களுக்கு சுருண்டது தென்னாப்பிரிக்க அணி

...6-ம் பக்கம்






● சேலம் மாவட்டம் மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா விவசாயிகளின் நலன் கருதி, குறுவை சாகுபடிக்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தண்ணீரை திறந்து வைத்து மலர் தூவினார். இந்நிகழ்வின்போது அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இரா.ராஜேந்திரன், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மா.மதிவேந்தன், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர் இராமச்சந்திரன், துணை மேயர் சாரதா தேவி, மாவட்ட கலெக்டர் பிருந்தா தேவி மற்றும் துறைசார்ந்த அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 12 டெல்டா மாவட்டங்களின் பாசனத்துக்காக

# மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

மேட்டூர், ஜூன் 13-

**மேட்டூர் அணையின் வரலாற்றில் 92-வது ஆண்டாக 12 டெல்டா மாவட்டங்களின் பாசனத்துக்காக தண்ணீர் திறந்து வைக்கப்பட்டது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைத்தார். இதன் மூலம் 17.15 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.**

மேட்டூரில் காவிரியின் குறுக்கே மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. தமிழகத்தின் முக்கிய நீர் ஆதாரமாக உள்ள மேட்டூர் அணை முழுக் கொள்ளளவை எட்டும் போது 93.47 டிஎம்சி நீர் இருப்பு இருக்கும். மேட்டூர் அணையில் திறக்கப்படும் நீரைப் பயன்படுத்தி சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சி உட்பட 12 காவிரி டெல்டா மாவட்டங்களில் 17.15 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. மேலும் 16 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாக இருக்கிறது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் குறுவை, சம்பா, தாளடி நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி முதல் ஜனவரி 28-ம் தேதி வரை 230 நாட்களுக்கு மொத்தம் 330 டிஎம்சி நீர் தேவைப்படும். அணையில் நீர் இருப்பை பொறுத்து, ஜூன் 12-ம் தேதிக்கு முன்போ, அல்லது காலதாமதமாகவோ அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. காவிரி டெல்டா பாசனத்துக்கு நீர் திறக்க வேண்டுமானால் அணையில் குறைந்தபட்சம் 90 அடிக்கு நீர் இருந்தால் மட்டுமே சாகுபடிக்கு முழுமையாக நீர் திறக்க முடியும். நடப்பாண்டில் அணையின் நீர்மட்டம் 115 அடியாக இருப்பதாலும், பருவமழையை எதிர்நோக்கி, குறித்த நாளான ஜூன் 12-ம் தேதியான நேற்று பாசனத்துக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் மேட்டூர் அணையின் வலது கரையில் உள்ள மேல்மட்ட மதகுகளின் மின் விசையை இயக்கி தண்ணீரை திறந்து வைத்தார். தொடர்ந்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

மேட்டூர் அணையின் 92 ஆண்டு கால வரலாற்றில், உரிய காலத்தில் (ஜூன் 12-ம் தேதி) டெல்டா பாசனத்துக்கு நீர் திறக்கப்படுவது இது 20-வது முறையாகும். நீர் இருப்பும், வரத்தும் திருப்திகரமாக இருந்ததால் விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று, ஜூன் 12-ம் தேதி முன்பு 11 முறையும் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அதேபோல், பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு 61 முறை தள்ளிப்போயுள்ளது. மேட்டூர் அணையில் இருந்து. துவக்கத்தில் வினாடிக்கு 3,000 கன அடி வீதம் திறக்கப்பட்ட தண்ணீர் படிப்படியாக வினாடிக்கு 10,000 கனஅடி வரை அதிகரிக்கப்படும். மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் சுரங்க மின் நிலையம் அனல் மின் நிலையம் மற்றும் 7 கதவணைகள் மூலம் 460 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

### குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் பயங்கரம்: குடியிருப்பு பகுதிக்குள்

# பயணிகள் விமானம் விழுந்து விபத்து

## 200-க்கும் மேற்பட்டோர் உடல் கருகி பலி

## ஜனாதிபதி, பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின் இரங்கல்







அகமதாபாத், ஜூன் 13-

**குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் இருந்து லண்டன் காட்விக் விமான நிலையத்திற்கு நேற்று மதியம் ஏர் இந்தியாவின் ஏஐ 171 போயிங் விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் விழுந்து நொறுங்கியதில் அதில் பயணம் செய்த 169 இந்தியர்கள் உள்ளிட்ட 200 -க்கும் மேற்பட்டோர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த சம்பத்தில் உயிரிழந்தோருக்கு ஜனாதிபதி, பிரதமர் மோடி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.**

**குடியிருப்பு பகுதியில்**

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியாவின் ஏஐ 171 போயிங் விமானம் சில நிமிடங்களில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து மதியம் 1.17 மணிக்கு நிகழ்ந்துள்ளது. புறப்பட்ட சில நிமிடங்களில் மேகானி நகர் குடியிருப்பு பகுதி அருகே கீழே விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. மேகானி நகர் குடியிருப்பு பகுதியில் உள்ள பயிற்சி மருத்துவர் குடியிருப்பில் மோதியது. அங்கு இருந்த 60 பயிற்சி மருத்துவர்களின் கதி என்ன? என தெரியவில்லை. எனினும் பலர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்கா அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் 5 மருத்துவ மாணவர்கள் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது.

**242 பேர் பயணம்....**

விமானத்தில் 2 விமானிகள், 10 ஊழியர்கள் உள்பட 242 பேர் பயணம் செய்தனர். இதில் 169 பேர் இந்தியர்கள். 53 பேர் இங்கிலாந்தை சேர்ந்தவர்கள். ஒருவர் கனடா நாட்டைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. 12 வயதிற்கு உட்பட்ட 14 குழந்தைகள் பயணம் செய்துள்ளனர். இந்த விபத்தில் குஜராத்தின் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உயிரிழந்தார். இந்த விபத்தில் 130 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியானது. தற்பொழுது பலி எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது. தற்பொழுது கிடைத்த தகவலின்படி பலி எண்ணிக்கை 200-க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

**ஜனாதிபதி, பிரதமர்...**

அகமதாபாத்தில் நடந்த துயரமான விமான விபத்து குறித்து அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன். இது ஒரு மனதை உடைக்கும் பேரழிவு. எனது எண்ணங்களும் பிரார்த்தனைகளும் பாதிக்கப்பட்ட மக்களுடன் உள்ளன. விவரிக்க முடியாத துயரத்தின் இந்த நேரத்தில் தேசம் அவர்களுடன் நிற்கிறது என்று ஜனாதிபதி திரவுபதி முர்மு இரங்கல் தெரிவித்துள்ளார்.

**முதல்வர் ஸ்டாலின்...**

விமான விபத்தில் உயிரிழந்தோருக்கு மஹாராஷ்டிரா முதல்வர் பட்னவிஸ், ஆந்திர முதல்வர் சந்திரபாபு, தமிழக முதல்வர் ஸ்டாலின், மேற்கு வங்க முதல்வர் மம்தா, மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்தனர்.

**மீட்பு பணி தீவிரம்**

படுகாயங்களுடன் பயணிகள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளனர். வீடுகள் மீது விமானம் விழுந்து நொறுங்கியது தொடர்பாக குஜராத் முதல்வருடன் மத்திய அமைச்சர் அமித்ஷா ஆலோசனை நடத்தினர். 7 தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டன. 80 பேர் கொண்ட மீட்புப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதை தொடர்ந்து, தேசிய பேரிடர் மீட்புப்படையின் மூன்று குழுவினர் அகமதாபாத் விரைந்தனர்.

**பிரதமர் ஆலோசனை...**

பயணிகள் விமான விபத்து குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, விமான போக்குவரத்து துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு உடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார். விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும் என பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார். விபத்தில் சிக்கிய பயணிகள் விமானத்தில் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி பயணம் செய்துள்ளார் என்று சமூக வலைதளத்தில் தகவல் வெளியாகி உள்ளது. பின்னர் அவர் உயிரிழந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## மனதை உடைக்கும் பேரழிவு: ஜனாதிபதி, பிரதமர் இரங்கல்

புதுடில்லி, ஜூன் 13-

**ஆமதாபாத் விமான விபத்துக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்து உள்ளனர்.**

இது தொடர்பாக ஜனாதிபதி திரவுபதி முர்மு வெளியிட்ட அறிக்கையில், ஆமதாபாத்தில் நடந்த துயரமான விபத்து குறித்து அறிந்து மிகவும் துயரம் அடைந்தேன். மனதை உடைக்கும் பேரழிவு. பாதிக்கப்பட்ட மக்களுக்காக பிரார்த்தனை செய்கிறேன். விவரிக்க முடியாத இந்த சோகமான நேரத்தில் அவர்களுடன் தேசம் துணை நிற்கிறது.

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள செய்தியில், ஆமதாபாத் துயரச் சம்பவம் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது; வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு மனதை நொறுக்கிவிட்டது. இந்த சோகமான நேரத்தில், பாதிக்கப்பட்ட அனைவருடனும் எனது எண்ணங்கள் உள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைச்சர்கள், அதிகாரிகள் உதவுவதைக் கண்காணித்து வருகிறேன். இவ்வாறு அவர்கள் தெரிவித்து உள்ளனர்.

## விமானத்தின் எமர்ஜென்சி வழியாக குதித்து உயிர் பிழைத்த பயணி

அகமதாபாத், ஜூன் 13-

**ஏர் இந்தியா விமான விபத்தில் பயணி ஒருவர் உயிர் பிழைத்துள்ளதாக குஜராத் காவல்துறை தெரிவித்துள்ளது.**

குஜராத் மாநிலம் அகமதாபாத்தின் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து லண்டன் (காட்வீக்) புறப்பட்ட ஏர் இந்தியா போயிங் 787 விமானம் விமானம் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தில் 242 பேர் பயணம் செய்துள்ள நிலையில், இதுவரை 204 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், பலி எண்ணிக்கை உயரக்கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், ஏர் இந்தியா விமான விபத்தில் பயணி ஒருவர் உயிர் பிழைத்துள்ளதாக குஜராத் காவல்துறை தெரிவித்துள்ளது. விமானத்தின் 11ஏ இருக்கையில் பயணித்த ஒருவர் உயிர் பிழைத்திருப்பதை போலீசார் கண்டுபிடித்தனர். ஏர் இந்தியா விமானத்தில் 242 பேர் பயணித்த நிலையில் விமானத்தில் பயணம் செய்த அஜய் குமார் ரமேஷ் (40) உயிர் தப்பியுள்ள நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மார்பு, கண் உள்ளிட்ட இடங்களில் ரமேஷுக்கு காயம் ஏற்பட்டுள்ளதால் அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

### நெல் கொள்முதல் விலை ரூ.2,500-ஆக உயர்வு:

# சேலம் மாவட்டத்திற்கு 6 புதிய அறிவிப்புகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

சேலம், ஜூன் 13-

**சேலம் மாவட்டத்திற்கு 6 புதிய அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.**

சேலத்தில் நடைபெற்ற விழாவில் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதையடுத்து நிகழ்வில் பேசிய அவர், "நெல் கொள் முதல் விலை சாதாரண ரகத்திற்கு ரூ.131, சன்ன ரகத்திற்கு ரூ. 156 உயர்த்தப்படுகிறது. இனி சாதாரண ரகத்திற்கு (குவிண்டால்) ரூ.2,500, சன்ன ரகத்திற்கு ரூ.2,545 கிடைக்கும். இதனால் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைவார்கள். சேலத்திற்கு தி.மு.க அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளது. சேலத்தில் 9 உழவர் சந்தைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சேலத்தில் ரூ.548 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் சேலத்திற்கு ரூ.7600 கோடியில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் மட்டும 56 கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்திற்கு புதிய அறிவிப்புகள்: சேலத்தில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் சாலைகள் சீரமைக்கப்படும், சேலம் செவ்வாப்பேட்டை தினசரி சந்தை ரூ.9 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும், சங்ககிரி நகராட்சியில் புதிய வணிக வளாகம் கட்டப்படும். மேட்டூர் நரசிங்கபுரத்தில் புதிய நகராட்சி கட்டடங்கள் கட்டப்படும், ஆத்தூரில் ரூ.5 கோடியில் புதிய குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும், தாரமங்கலம், எடப்பாடி, ஆத்தூர் பகுதிகளில் புதிய குடிநீர்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும், தலைவாசல் இழுப்பநத்தம் வேளாண் விற்பனை மையம் ரூ.10 கோடியில் தரம் உயர்த்தப்படும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

தினபூமி,
thinaboomi.com ஜூன் 13, 2025

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE | தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|---|---|
| -823.16 | -253.20 | 1 சவரன் ₹72,800 | 1 கிலோ ₹119,000 | ₹85.56 | ₹102.63 |
| பாயின்ட் 81,691.98 | பாயின்ட் 24,888.20 | 1 கிராம் ₹9,100 | 1 கிராம் ₹119.00 | | டீசல் ₹94.24 |

### முடிவுக்கு வந்தது மோதல்:
# எலான் மஸ்க்கின் மன்னிப்பை ஏற்று கொண்ட அதிபர் டிரம்ப்

**வாஷிங்டன், ஜூன் 13-**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் குறித்து தான் தெரிவித்த கருத்துக்களுக்கு மன்னிப்பு கேட்டு கொள்வதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கும், டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க்குக்கும் சமீப காலமாக மோதல் ஏற்பட்டு வருகிறது. அமெரிக்க அரசு கொண்டு வந்த வரி மற்றும் செலவு மசோதா காரணமாக டிரம்ப்புக்கும், எலான் மஸ்க்குக்கும் இடையிலான நட்புறவில் விரிசல் ஏற்பட்டது. இருவரும் ஒருவரையொருவர் குற்றம்சாட்டி, சமூக ஊடகங்கள் மூலம் மோதலில் ஈடுபட்டு வந்தனர்.

முக்கியமாக டிரம்ப் அரசு கொண்டுவந்துள்ள 'பிக் பியூட்டிபுல் பில்' எனப்படும் வரிக்குறைப்பு மசோதாவை மஸ்க் விமர்சித்தார். செனட் சபையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மசோதா முட்டாள்தனமானது என்று மஸ்க் தெரிவித்தார். தன்னை விமர்சித்த மஸ்க்குக்கு எதிராக அவரது நிறுவனத்துக்கு அரசு மானியங்கள் மற்றும் ஒப்பந்தங்களை நிறுத்துவதாக டிரம்ப் மிரட்டல் விடுத்தார்.

இதனையடுத்து, சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோக நெட்வொர்க் தொடர்புடைய சர்ச்சைக்குரிய எப்ஸ்டீன் கோப்புகளில் டிரம்பின் பெயர் இருந்ததாகவும், அதனால்தான் விசாரணையின் விவரங்களும் கண்டுபிடிப்புகளும் பகிரங்கப்படுத்தப்படவில்லை என்றும் எலோன் மஸ்க் குற்றம் சாட்டினார்.

டிரம்ப் - எலான் மஸ்க் மோதல் உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் குறித்து தான் தெரிவித்த கருத்துக்களுக்கு மன்னிப்பு கேட்டு கொள்வதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பதிவில், " கடந்த வாரம் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் குறித்து எனது சில பதிவுகள் அளவு மீறி சென்றுவிட்டன. அதற்காக நான் வருத்தம் தெரிவித்து கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

எலான் மஸ்க்கின் மன்னிப்பை ஏற்றுக் கொண்ட டிரம்ப், ''அவர் மன்னிப்பு கேட்டது மிகவும் நல்ல விஷயம்'' என்று தெரிவித்தார்.

# தி.மு.க. கூட்டணியில் இருந்து ஒரு கட்சி கூட வெளியேறாது: திருமாவளவன்

**சிதம்பரம், ஜூன் 13-**

தி.மு.க. கூட்டணியில் இருந்து ஒரு கட்சி கூட வெளியேறுவதற்கு வாய்ப்பே இல்லை என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், சிதம்பரம் தொகுதி எம்.பி.யுமான திருமாவளவன் சிதம்பரம் தொகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். சமக்ர சிஷ்யா அபியான் திட்டத்தின் படி ஆண்டுதோறும் மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்கவில்லை. இதனால் தமிழக கல்வித்துறைக்கு ஆயிரக்கணக்கான கோடி வந்து சேரவில்லை. அது தொடர்பாக எந்த நீதிபதியும் கருத்து சொல்லாதது அதிர்ச்சி அளிக்கிறது. கூட்டணியில் பல கட்சிகள் இடம் பெற்றுள்ளன. நாங்கள் இந்த கூட்டணியில் தான் இருப்போம். தி.மு.க கூட்டணிக்குள் சலசலப்பை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். அதற்கெல்லாம் வாய்ப்பே இல்லை. தி.மு.க. கூட்டணியில் இருந்து ஒரு கட்சி கூட வெளியேறுவதற்கு வாய்ப்பே இல்லை. தி.மு.க. கூட்டணியை சிதறடிக்க முடியவில்லை என்ற கவலை அவர்களுக்கு இருக்கிறது.

தமிழ் இன உணர்வாளர்களை சனாதன சக்தியாக மாற்றுவதற்கு கவர்னர் முயற்சிக்கிறார். முருக பக்தர்களை பா.ஜ.க. ஆதரவாளராக மாற்றுவதற்கு பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். முயற்சிக்கிறது. இவர்களுக்கான கோரிக்கை அரசியல் ஆதாயம் என்பது தான் மாநாட்டின் நோக்கம். அப்படித்தான் வள்ளுவரையும் சனாதானப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

உங்கள் முயற்சி ஒருபோதும் பலிக்காது. தமிழ்நாடு ஏற்கனவே பண்படுத்தப்பட்ட, பக்குவப்பட்ட மண். முருக பக்தர்களாக இருந்தாலும் அவர்கள் மத சார்பற்றவர்களாக தான் இருப்பார்கள். ஐயப்ப பக்தர்களாக இருந்தாலும் அவர்கள் மத சார்பற்றவர்களாகதான் இருப்பார்கள். தமிழ்நாட்டில் நீங்கள் மதத்தின் பெயரால் வன்முறைகளை தூண்ட முடியாது. ஆதாயம் தேட முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# காஞ்சிபுரத்தில் வரும்18-ம் தேதி அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம்
### எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, ஜூன் 13-**

காஞ்சிபுரம் மாநகராட்சியின் சுகாதார சீர்கேட்டை கண்டித்து வரும் 18ம் தேதி முன்னாள் அமைச்சருமான எஸ்.எஸ். வைகைச்செல்வன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.



இது குறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

காஞ்சிபுரம் மாவட்டத்தில், குறிப்பாக காஞ்சிபுரம் மாநகராட்சி மக்களுக்குப் பயன்தரும் திட்டங்கள் எதையும் நிறைவேற்றப்படாமல் உள்ளன. காஞ்சிபுரம் மாநகராட்சியில் மொத்தம் உள்ள 51 வார்டுகளிலும் கழிவுநீர் பிரச்சனை, மற்றும் தூய்மைப்பணி சரிவர மேற்கொள்ளப்படாத காரணத்தால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு மக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

காஞ்சிபுரம் மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட வார்டுகளில் ஆமை வேகத்தில் நடைபெறும் பாதாளசாக்கடைத் திட்டம் மற்றும் குடிநீர் திட்டத்தால் சாலைகள் பழுதடைந்து அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்கத் தவறியதை கண்டித்து அ.தி.மு.க. காஞ்சிபுரம் மாவட்டத்தின் சார்பில், வரும் 18.6.2025 – புதன்கிழமை காலை 10 மணியளவில், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக இலக்கிய அணிச் செயலாளரும், கழக செய்தித் தொடர்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.எஸ். வைகைச்செல்வன் தலைமையிலும்; காஞ்சிபுரம் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வி. சோமசுந்தரம் முன்னிலையிலும் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

# உயிரிழந்தவர்களை அடையாளம் காண டி.என்.ஏ. பரிசோதனைக்கு ஏற்பாடு

**அகமதாபாத், ஜூன் 13-**

அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களை அடையாளம் காண டி.என்.ஏ. பரிசோதனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விமான விபத்து குறித்து குஜராத் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் தனஞ்சய் திவேதி கூறியதவாது:- அகமதாபாத் விமானம் விபத்துக்குள்ளான பகுதியில் சிவில் மருத்துவமனை மாணவர் விடுதி, ஊழியர்கள் குடியிருப்புகள் மற்றும் பிற குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ளன. அந்தப் பகுதியில் வசிப்பவர்களும் காயமடைந்தனர். காயமடைந்த சுமார் 50 பேர் அகமதாபாத் சிவில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பி.ஜே. மருத்துவத்தில் டி.என்.ஏ சோதனை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே விமானப் பயணிகளின் குடும்பங்கள் மற்றும் நெருங்கியவர்கள்,

குறிப்பாக அவர்களின் பெற்றோர் மற்றும் குழந்தைகள், அந்த இடத்தில் தங்கள் மாதிரிகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் அடையாளம் காணப்படுவார்கள்.

பயணிகளின் உறவினர்கள் மற்றும் சிவில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட பிற காயமடைந்தவர்கள் ஏதேனும் விசாரணை செய்ய வேண்டுமானால், சிவில் மருத்துவமனை அகமதாபாத் இரண்டு ஹெல்ப் லைன் எண்களை வெளியிட்டுள்ளது. அதன்படி எந்த உதவிக்கும் , 6357373831 மற்றும் 6357373841 இந்த எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# டில்லியில் கடுமையான வெப்ப அலைக்கான சிவப்பு எச்சரிக்கை

**புதுடில்லி, ஜூன் 13-**

தலைநகர் டில்லியில் கடுமையான வெப்ப அலை வீசி வருவதையடுத்து இந்திய வானிலை ஆய்வு மையம் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பல மாநிலங்களில் கோடைவெய்யில் கொளுத்திவருகின்றது. ஆனால் தமிழகம், கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் தென்மேற்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில், கோடை வெப்பத்தின் பிடியிலிருந்து இந்த மாநிலங்கள் தப்பித்துள்ளது. தலைநகர் டில்லியில் கடும் வெய்யில் வெளுத்தி வருகின்றது. இதனால் அங்குள்ள மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

டில்லியின் என்.சி.ஆர். பகுதியில் நேற்று காலை 10 மணி வரை சுமார் 36 டிகிரி செல்சியஸைத் தொட்டுள்ளது. இதனால் தேசிய தலைநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகப்படியான வெப்பத்திற்கான சிவப்பு எச்சரிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது. தொடர்ந்து, இந்த வெப்பநிலையானது படிப்படியாகக் குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சிவப்பு எச்சரிக்கையை அடுத்து, குடியிருப்பாளர்கள் நீர் ஆகாரம் அதிகம் எடுத்துக்கொள்ளவும், நேரடியாகச் சூரிய ஒளி படும் உச்ச வெப்ப நேரங்களில் கூடுமானவரை வெளியில் வருவதைத் தவிர்க்கலாம். மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளது.

# பா.ம.க. தலைவராக நானே நீடிப்பேன்: ராமதாஸ் உறுதி

**விழுப்புரம், ஜூன் 13-**

2026 தேர்தல் வரை நானே பா.ம.க. தலைவராக நீடிப்பேன் என்று ராமதாஸ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் மற்றும் தலைவர் அன்புமணி இடையிலான மோதல் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தைலாபுரம் தோட்டத்தில் ராமதாஸ் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:- பா.ம.க.வில் ஏற்பட்டுள்ள பிரச்சனை குறித்து நடத்திய சமரச பேச்சுவார்த்தை டிராவில் முடிந்தது. சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இருவர் யார் என்பது உங்களுக்கு தெரியும். தலைவர் பதவியை நான் விட்டுக் கொடுக்க தயாராக இருந்த போதும் அன்புமணி நம்பவில்லை. அய்யாவை நம்ப முடியாது. எழுதி கொடுக்க சொல்லுங்கள் என்றார். என்னை தேடி வந்த 14 பஞ்சாயத்துக்காரர்களும் ஒரே விதமான தீர்ப்பையே சொன்னார்கள். எல்லாம் தனக்கே வேண்டும் என்று அன்புமணி சொல்கிறார்.

மாவட்ட செயலாளர்கள் வருகையை தடுத்து நிறுத்தி, அவரே (அன்புமணி) செல்போனில் பேசி, என்னை மானபங்கம் செய்துள்ளார். அன்று அமைதி காத்திருந்தால், அதிகாரம் தானாக அன்புமணிக்கு வந்து இருக்கும். ஓரிரு ஆண்டுகளில் முடிசூட்டுவிழா நானே முன்னின்று நடத்தியிருப்பேன்

என்னுடைய பாட்டாளி சொந்தங்களை, என் உயிருக்கும் மேலாக, தெய்வங்களாக நினைக்கிறேன். அவர்கள் என்னை குல தெய்வம் என்று நினைக்கிறார்கள், சொல்கிறார்கள். எல்லாம் எனக்கே வேண்டும் என்றார் அன்புமணி. என்னை கொள்ளுப் பேரன், பேத்திகளுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டு இருங்கள் என்றார். என் உயிருள்ளவரை அவ்வாறு இருக்க முடியாது என்று கூறினேன். என்னுள் இருக்கும் இயற்கையான கோபம் கொஞ்சம் பொங்கி எழுந்து 'நீயா, நானா பார்த்து விடுவோம் ?' என்ற முடிவுக்கு கொண்டு வந்தது.

என்னுடைய நெஞ்சில் குத்துகிறார்கள்.. என்னை நடைப்பிணம் ஆக்கி விட்டு நடைபயணம் செய்கிறார்கள். என் கைவிரல்களை கொண்டே, என் கண்ணை குத்திக்கொண்டேன்.

உயிருள்ள என்னை உதாசினம் செய்துவிட்டு, என் படத்தை வைத்து உற்சவம் செய்கிறார்கள். கூட்டணி குறித்து நான் தான் முடிவு செய்வேன். 2026 தேர்தல் வரை நானே பா.ம.க. தலைவராக நீடிப்பேன். பிறகு வேண்டுமானால் அவர் (அன்புமணி) இருக்கட்டும். இது தான் என் முடிவு

இவ்வாறு ராமதாஸ் தெரிவித்தார்.

### குஜராத் விமான விபத்து:
# உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல்

**அகமதாபாத், ஜூன் 13-**

விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் குஜராத் மாநிலம் அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து நேற்று லண்டன் புறப்பட்ட 'ஏர் இந்தியா' பயணிகள் விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. விமானத்தில் மொத்தம் 242 பேர் இருந்துள்ளனர். விமானத்தில் இருந்த பயணிகளில் 169 பேர் இந்தியர்கள், 53 பேர் இங்கிலாந்து நாட்டவர்கள், கனடாவை சேர்ந்தவர் ஒருவர் மற்றும் 7 பேர் போர்ச்சுகல் நாட்டை சேர்ந்தவர்கள் என 'ஏர் இந்தியா' நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ''இந்தியாவின் அகமதாபாத்தில் நடந்த துயரமான விமான விபத்து வேதனையளிக்கிறது. இந்த விபத்தில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். உங்கள் வலியை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். இந்த துயரமான தருணத்தில் ஐரோப்பிய ஒன்றியம் இந்திய மக்களுடன் ஒற்றுமையாக நிற்கிறது'' என்று பதிவிட்டுள்ளார்.

மாலத்தீவு நாட்டின் அதிபர் முகமது முய்சு வெளியிட்டுள்ள பதிவில், ''இந்த துயரமான நேரத்தில் இந்திய மக்கள் மற்றும் இந்திய அரசாங்கத்துடன் மாலத்தீவு அரசும், அதன் மக்களும் உறுதுணையாக நிற்கிறோம்'' என்று தெரிவித்துள்ளார்.

மலேசிய பிரதமர் இப்ராகிம் வெளியிட்டுள்ள பதிவில், ''மலேசிய அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பாக, பாதிக்கப்பட்ட அனைவரின் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவின் துக்கத்தில் நாங்கள் பங்கு கொள்கிறோம். நிவாரணப் பணிகள் தொடரும் வேளையில் நாங்கள் உறுதுணையாக நிற்கிறோம். பாதிக்கப்பட்டவர் களுடனும், இந்த பயங்கரமான இழப்பால் வாடுபவர்களுடனும் எங்கள் எண்ணங்களும், பிரார்த்தனைகளும் உள்ளன'' என்று தெரிவித்துள்ளார்.

நேபாள பிரதமர் புஷ்பா கமல் பிரசந்தா வெளியிட்டுள்ள 'எக்ஸ்' வலைதள பதிவில், ''பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் எனது எண்ணங்கள் உள்ளன. இந்த துயரமான தருணத்தில் நேபாளம் இந்தியாவுடன் ஒற்றுமையாக நிற்கிறது'' என்று பதிவிட்டுள்ளார். மேலும் ரஷ்ய அதிபர் புதின், இங்கிலாந்து பிரதமர் கீர் ஸ்டார்மர் உள்ளிட்ட பல்வேறு உலக தலைவர்கள், குஜராத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**13-06-2025**




**மேஷம்:-** இனிய சுற்றுலாப் பயணங்களின் இன்பம் பொங்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். தெய்வீக காரிய ஈடுபாடு, தான தரும சிந்தனை ஏற்படும். தொழிலில் நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**ரிஷபம்:-** வழக்கு விவகாரங்கள் தள்ளிப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்து கொள்வது நல்லது. நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும்.

**மிதுனம்:-** உயர்பதவி, உடல் ஆரோக்கியம், சந்ததி விருத்தி, என அதிர்ஷ்டம் தரும் நாள். வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். தெய்வீகப் பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கடகம்:-** பல வழிகளிலும் பணவரவு ஏற்படும். எல்லா வகையிலும் ஏற்றம் கிடைக்கும். நல் ஆரோக்கியம், நண்பர்கள் சந்திப்பு, திருமணம் மற்றும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஆகியவை ஏற்படும்.

**சிம்மம்:-** மனைவி, மக்களின் உடல் நிலையில் அக்கறை தேவை. மேலதிகாரிகள் மற்றும் பெரியவர்களிடம் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. செலவுகள் கட்டுக்கடங்காமல் இருக்கும்.

**கன்னி:-** இன்றைய நாள் கழிவது யுகங்கழிவது போன்றிருக்கும். தாயின் உடல் நிலையில் அதிக அக்கறை கொள்ளுங்கள். நீர்நிலைகளில் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம்.

**துலாம்:-** காரிய வெற்றிகள் குவியும் களிப்பான நாள். அரசு ஆதரவு இருக்கும். கல்வியில் தேர்ச்சி உண்டு. தன்னம்பிக்கை மற்றும் தைரியம் அதிகரிக்கும். அதிகாரம் மிக்க பதவி உயர்வு ஏற்படலாம்.

**விருச்சிகம்:-** தனலாபம், குடும்ப நிம்மதி, குடும்ப சுகம் ஆகியவை சிறிது குறையும். புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. வார்த்தைகளை அளந்து பேசுவது வம்புகளை தவிர்க்க உதவும்.

**தனுசு:-** பெரியோர் நேசம், பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என யோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும். பெயரும், புகழும் உண்டாகும்.

**மகரம்:-** பெண்களால் பணம் விரயமாகும். கோபத்தைக் குறைப்பது நல்லது. திறமையுடன் செயல்பட்டாலும் இகழ்ச்சியே மிஞ்சும். வியாபாரிகள் நீங்கள் எதிர்பார்த்த அளவு இலாபத்தை அடைவார்கள்.

**கும்பம்:-** காரிய அனுகூலம் ஏற்படும் நாள். அரசு மற்றும் அரசியல்வாதிகள் ஆதரவால் நன்மைகள் நடக்கும். தன்னம்பிக்கை கூடும். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு புதிய வேலை கிடைக்கும்.

**மீனம்:-** வழக்கு விவகாரங்கள் தள்ளிப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்து கொண்டால் அனுகூலம் ஏற்படும். நினைப்பதற்கு மாறாக எல்லாம் நடக்கும்.

# நிர்வாகிகளுடன் பிரேமலதா 2-வது நாளாக ஆலோசனை

**சென்னை, ஜூன் 13-**

தே.மு.தி.க. நிர்வாகிகளுடன் பிரேமலதா 2-வது நாளாக ஆலோசனை நடத்தினார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா கட்சி நிர்வாகிகளுடன் நேற்று முன்தினம் முதல் ஆலோசனை நடத்தி வருகிறார். வருகிற 14-ந்தேதி வரை நடைபெறும் இந்த கூட்டத்தின் முதல் நாளான நேற்று முன்தினம் தென் மாவட்டத்தைச் சேர்ந்த கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நேற்று இரண்டாவது நாள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேற்கு மண்டல பொறுப்பாளர்கள், மாவட்ட செயலாளர்கள் பங்கேற்றனர். கொங்கு மண்டலத்தை சார்ந்த 29 தொகுதிகளை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் பேசிய பிரேமலதா, கட்சி வளர்ச்சி பணிகளை முடுக்கிவிடுமாறு நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டார். அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை சந்திப்பதற்கு கட்சியினர் ஆயத்தமாக வேண்டும் என்றும், கூட்டணியை பற்றி கவலைப்பட வேண்டாம் என்றும் கூறி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.



தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி கொறடாவும், முன்னாள் அ.தி.மு.க. அமைச்சருமான எஸ்.பி.வேலுமணியை திருவள்ளூர் மாவட்ட அ.தி.மு.க. மாணவரணி பொருளாளர் டாக்டர் ச.வெங்கடேசன் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### மிக கனமழை எச்சரிக்கை:
# கோவை, நீலகிரிக்கு பேரிடர் மீட்பு குழுக்கள் வருகை

**கோவை, ஜூன் 13-**

கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டதை தொடர்ந்து கோவை மற்றும் நீலகிரிக்கு தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் மாநில பேரிடர் மீட்பு படையினர் வருகை தர உள்ளனர்

வடக்கு ஆந்திர கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள மத்திய மேற்கு வங்கடக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் தாக்கத்தால் கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்திற்கு இன்று கன முதல் மிக கனமழைக்கான ஆரஞ்ச் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

வருகிற 14 மற்றும் 15-ந் தேதிகளில் நீலகிரி மாவட்டத்திற்கு அதிகனமழைக்கான ரெட் அலர்ட் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் வருகிற 16-ந் தேதி வரை கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல், நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கன மழை முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதனை அடுத்து இந்த 7 மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழக அரசு உத்தரவிட்டது. கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டதை தொடர்ந்து கோவை மற்றும் நீலகிரிக்கு தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் மாநில பேரிடர் மீட்பு படையினர் வருகை தர உள்ளனர்.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்பு படையினர் மழை, வெள்ளத்தின் போது மக்களை காக்க வேண்டிய உபகரணங்கள், படகு, கயிறு மற்றும் சாலைகளில் விழும் மரங்களை அகற்றுவதற்கான ராட்சத கருவிகள் உள்பட பல்வேறு உபரகணங்களையும் எடுத்து கொண்டு அந்தந்த பகுதிகளுக்கு செல்ல உள்ளனர். அங்கு தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபட்டு, மழை வெள்ளத்தின்போது மக்களை காப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளனர்.

# யு.பி.எஸ்.சி. தேர்வில் தமிழக மாணவர்கள் புதிய சாதனை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை, ஜூன் 13-**

யு.பி.எஸ்.சி. முதனிலைத் தேர்வு முடிவுகளில் நம் மாணவர்கள் இதுவரை இல்லாத எண்ணிக்கையில் சாதனை படைத்துள்ளனர் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; தமிழ்நாடு அரசின் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியிலும் "நான் முதல்வன்" திட்டத்திலும் பயின்ற நம் மாணவர்கள் யு.பி.எஸ்.சி. முதனிலைத் தேர்வு முடிவுகளில் இதுவரை இல்லாத எண்ணிக்கையில் சாதனை படைத்துள்ளனர். முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்விலும் அடுத்து நீங்கள் முத்திரை பதிக்க வாழ்த்துகிறேன். உங்கள் வெற்றிமுகங்களை நேரில் காண ஆவலாய் இருக்கிறேன். இந்தச் சாதனைக்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகளுக்கும் பயிற்றுநர்களுக்கும் என் பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்! தமிழ்க் கொடி உயர உயரப் பறக்கட்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பாரதிய ஜனதாவின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது

## அமைச்சர் கே.என்.நேரு பேட்டி

**திருச்சி, ஜூன் 13-**

எங்கள் கூட்டணியில் இருந்து கட்சிகளை தங்கள் கூட்டணிக்கு இழுக்கும் எல். முருகன் எண்ணம் நிறைவேறாது என அமைச்சர் கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு செய்தியளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது, தமிழகம் முழுவதும் 56,000 இலவச பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பட்டா கோரி பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து எங்களோடு இணைய பலர் காத்திருக்கிறார்கள்.

இதுவரை பா.ஜ.க.வினரால் தங்கள் கூட்டணியை இறுதிப்படுத்த முடியவில்லை. எங்கள் கூட்டணியில் இருந்து கட்சிகளை தங்கள் கூட்டணிக்கு இழுக்கும் முயற்சியில் எல். முருகன் ஈடுபடுகிறார். அவரது எண்ணம் நிறைவேறாது.

தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்டு கட்சி கூடுதல் தொகுதிகள் கேட்பது தொடர்பாக மு.க.ஸ்டாலின் பார்த்துக் கொள்வார்.

இது குறித்து தான் கருத்து கூற முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

## அகமதாபாத் விமான விபத்து:

# அமித்ஷா, ராகுல் காந்தி இரங்கல்

**புதுடில்லி, ஜூன் 13-**

அகமதாபாத் விமான விபத்துக்கு மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, நிர்மலா சீதாராமன், காங்கிரஸ் எம்.பி., ராகுல் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அமித் ஷா விடுத்துள்ள இரங்கல் செய்தியில், அகமதாபாத்தில் நடந்த துயரமான விமான விபத்தால் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு வேதனை அடைந்தேன்.

பேரிடர் மீட்புப் படையினர் விபத்து நடந்த இடத்திற்கு விரைவாக விரைந்துள்ளனர். நிலைமையை மதிப்பிடுவதற்காக குஜராத் முதல்வர் பூபேந்திர படேல், உள்துறை அமைச்சர் ஹர்ஷ் சங்கவி மற்றும் அகமதாபாத் காவல் ஆணையர் ஆகியோருடன் பேசினேன்.

நிர்மலா சீதாராமன்: அகமதாபாத்தில் நடந்த விமான விபத்து குறித்து கேள்விப்பட்டு மிகவும் வருத்தமடைந்தேன்.

விமானத்தில் இருந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது பிரார்த்தனைகள்.

ராகுல் எம்.பி.: அகமதாபாத் ஏர் இந்தியா விபத்து இதயத்தை உடைக்கிறது. பயணிகள் மற்றும் பணியாளர்களின் குடும்பங்கள் உணரும் வலி மற்றும் பதட்டம் கற்பனை செய்ய முடியாதது. இந்த நம்பமுடியாத கடினமான தருணத்தில் எனது எண்ணங்கள் அவர்கள் ஒவ்வொருவருடனும் உள்ளன. நிர்வாகத்தின் அவசர மீட்பு மற்றும் நிவாரண முயற்சிகள் மிக முக்கியமானவை - ஒவ்வொரு உயிரும் முக்கியம், ஒவ்வொரு நொடியும் முக்கியம். காங்கிரஸ் தொழிலாளர்கள் களத்தில் உதவ தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் என பதிவிட்டுள்ளனர்.

# விபத்தின் போது நடந்தது என்ன?

# டி.ஜி.சி.ஏ., விளக்கம்

**புதுடில்லி, ஜூன் 13-**

அகமதாபாத்தில் விபத்துக்கு உள்ளான விமானத்தை இயக்கியவர் சுமீத் சபர்வால் அனுபவம் வாய்ந்தவர் என டி.ஜி.சி.ஏ., தெரிவித்து உள்ளது.

அகமதாபாத் விமான விபத்து தொடர்பாக டி.ஜி.சி.ஏ. எனப்படும் விமான போக்குவரத்து ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: அகமதாபாத்தில் இருந்து லண்டனுக்கு ஏர் இந்தியாவின் பி787 விமானம் கிளம்பிய உடனே நொறுங்கி விழுந்தது. இதில் 12 ஊழியர்கள் உட்பட 242 பேர் இருந்தனர். விமானத்தை கேப்டன் சுமீத் சபர்வாலும், கிளிவ் குந்தரும் இயக்கினர். சுமீத் சபர்வால் 8200 மணி நேரம் விமானத்தை இயக்கிய அனுபவம் உண்டு. துணை விமானிக்கு 1100 மணி நேரம் விமானத்தை இயக்கி உள்ளார்.

இந்திய நேரப்படி 1: 39 மணிக்கு விமானம் 23வது ஓடுபாதையில் இருந்து கிளம்பியது. கிளம்பிய சிறிது நேரத்தில் விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அறைக்கு (ஏ.டி.சி.) அவசர அழைப்பு வந்தது. பிறகு, ஏ.டி.சி. முயற்சி செய்தும் எந்த பதிலும் கிடைக்க வில்லை. ஓடுபாதையில் இருந்து கிளம்பிய உடனே விமான நிலையம் அருகே நொறுங்கி விழுந்து விபத்துக்குள்ளானது. சம்பவ இடத்தில் கடுமையான புகை மூட்டமாக காணப்படுகிறது. இவ்வாறு டி.ஜி.சி.ஏ. விளக்கம் அளித்துள்ளது.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

## குஜராத் விமான விபத்து:

# அவசர உதவி எண்கள் அறிவிப்பு

**புதுடில்லி, ஜூன் 13-**

ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளான நிலையில் மத்திய அரசின் உதவி எண்களை ஏர் இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது.

குஜராத் மாநிலம், ஆமதாபாத் விமான நிலையத்தில் இருந்து நேற்று பிற்பகல் 1.17-க்கு லண்டன் புறப்பட்ட ஏர் இந்தியா பயணிகள் விமானம் ஒன்று, புறப்பட்டு சில நிமிடங்களிலேயே விபத்துக்குள்ளானது. ஆமதாபாத் விமான நிலையம் அருகே உள்ள குடியிருப்புப் பகுதியில் விமானம் விழுந்து நொறுங்கி தீப்பற்றியுள்ளது. ஏர் இந்தியா விமானத்தில் சுமார் 242 பயணிகள் பயணித்ததாக கூறப்படுகிறது. விமானம் விழுந்து தீப்பிடித்த நிலையில், அந்த இடம் முழுவதும் கரும்புகை சூழ்ந்தது. இதையடுத்து தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.

இதையடுத்து, 1800 222 271, 1800 5691 444 என்ற மத்திய அரசின் உதவி எண்களில் அழைக்கலாம் என ஏர் இந்தியா அறிவிப்பு வெளியிட்டுள்ளது. 011 - 2461 0843, 96503 91859 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளலாம் என விமான போக்குவரத்து தெரிவித்துள்ளது.

# விமான விபத்தில் பலியானோருக்கு தலா ரூ.1 கோடி: டாடா குழுமம் அறிவிப்பு

**புதுடில்லி, ஜூன் 13-**

ஆமதாபாத் விமான விபத்தில் பலியானவர்களின் குடும்பத்துக்கு தலா ஒரு கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று டாடா குழுமத் தலைவர் என். சந்திரசேகர் அறிவித்துள்ளார். .

குஜராத் மாநிலம் ஆமதாபாத் விமான நிலையத்தில் இருந்து லண்டனுக்கு நேற்று பிற்பகல் புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் சிறிது நேரத்திலேயே கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தில் விமானப் பணியாளர்கள் உள்பட 242 பேர் பயணித்த நிலையில், இதுவரை 200-க்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஒருவர் மட்டுமே காயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, விமானம் மோதிய பி.ஜே. மருத்துவக் கல்லூரி விடுதியில் இருந்த மாணவர்கள் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 5 மாணவர்களும் பலியாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், விமான விபத்து சம்பவத்தில் உயிரிழந்த அனைவருக்கும் தலா ஒரு கோடி ரூபாய் நிதியுதவி வழங்கவுள்ளதாக டாடா குழுமம் மற்றும் ஏர் இந்தியாவின் தலைவர் என். சந்திரசேகர் தெரிவித்துள்ளார். மேலும், காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களின் மருத்துவச் செலவுகள் மற்றும் அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் டாடா குழுமம் செய்து தரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் விபத்தில் சேதமடைந்த பி.ஜே. கல்லூரிக்கு புதிய கட்டடமும் கட்டித் தரப்படும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயிற்சி மருத்துவர்கள் விடுதி கடும் சேதம்: 5 பேர் உயிரிழப்பு

**அகமதாபாத், ஜூன் 13-**

பி.ஜே. மருத்துவக் கல்லூரி ஹாஸ்டலில் விமானம் விழுந்ததில், 5 மாணவர்கள் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. 40-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டன் காட்விக்கிற்கு புறப்பட்ட ஏர் இந்தியா 171 (போயிங் 787-8) விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் மேகானிநகர் குடியிருப்பு பகுதி அருகே கீழே விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தில் 242 பேர் பயணம் செய்தனர். இரண்டு விமானிகள் உள்பட 12 விமான ஊழியர்கள் இதில் அடங்குவர். விமானத்தில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

விமானம் குடியிருப்பு பகுதியில் விழுந்ததுடன், பி.ஜே. மருத்துவக் கல்லூரி ஹாஸ்டலில் பயங்கரமாக மோதியுள்ளது. கட்டிடத்திற்குள் நுழைந்த விமானத்தின் வால் பகுதி மட்டுமே வெளியே தெரியும்படி காணப்பட்டது. மதியம் நேரம் என்பதால் தங்கும் விடுதிக்கு மதிய உணவு அருந்த பயிற்சி டாக்டர்கள் வந்துள்ளனர். இதனால் பலர் இந்த விபத்தில் பாதிக்கப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்த நிலையில் 5 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. 40-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

விமானத்தில் பயணம் செய்தவர்களை தவிர குடியிருப்பு மற்றும் ஹாஸ்டலில் உள்ளவர்களும் உயிரிழந்துள்ளதாக வந்துள்ள செய்தி சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. உயிரிழப்பு 300-ஐ தாண்டும் என அஞ்சப்படுகிறது.

**மரம் மனிதனின் உரம்**

## Format C-7

(for political parties to publish in the newspapers, social media platforms & website of the party)
Information regarding individuals with pending criminal cases, who have been selected as candidates, along with the reasons for such selection, as also as to why other individuals without criminal antecedents could not be selected as candidates.
(As per the Commission's directions issued in pursuance of the Order dated 13.02.2020 of the Hon'ble Supreme Court in contempt petition(C) no. 2192 of 2018 in WP(C) no. 536 of 2011)

| | | |
|---|---|---|
| Name of Political Party | : | ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM |
| *Name of the Election | : | BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025 |
| Name of State/UT | : | TAMIL NADU |
| Name of the Candidate | : | Thiru. M. DHANAPAL |

| Sl. No. | | | | | |
|---|---|---|---|---|---|
| | Criminal antecedents | | | | |
| 1. | a. | Nature of the offences | Demonstration without getting permission from the police and disturbing the traffic.U/s. 189(2), 126(2), 292 of BNS Act. | Demonstration without getting permission from the police and disturbing the traffic and causing nuisance to the general public. U/s. 126(2), 292, 189(2), 223 of BNS Act. | Not Applicable |
| | b. | Case No. | Cr. No. 685 /2024 Maduranthakam, PS | Cr. No. 77/2025 Thirukazhukundram, PS | Not Applicable |
| | c. | Name of the Court | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | d. | Whether charges have been framed or not (Yes/No) | No | No | Not Applicable |
| | e. | Date of conviction, if any | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | f. | Details of punishment undergone, if any | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | g. | Any other information required to be given | Not Applicable | Not Applicable | Not Applicable |
| 2. | The reasons for the selection of the candidate. Selection shall be with reference to the qualifications, achievements and merit of the candidate, and not mere "winnability" at the polls (not more than 100 words) | | The selected candidate was a former MLA., and a very dedicated and a dynamic party worker. He has a very good track record and having great respect and confidence. The cases above mentioned are politically motivated, and the same was for the purpose of public welfare. We believe that there will be no adverse outcome against the alleged candidate. | | |
| 3. | Reasons as to why other individuals without criminal antecedents could not be selected as candidates (not more than 100 words) | | The above selected Candidate is more competent person than other, He is well educated and He is a doctorate in Law and Criminology, the selected candidate is a meritorious and well known person in party as well in general public. Besides, the cases filed against him are politically motivated and false in nature. | | |

* In the case of election to Council of States or States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of Constituency.

R.M. BABU MURUGAVEL, B.A., B.L.,
Party Spokesperson,
Party Advocate's Wing Joint Secretary
All India Anna Dravida Munnetra Kazhagam, Head Office.

## Format C-2

( For political party to publish in website, newspapers, TV )

**Declaration about criminal antecedents of candidates set up by the party**

( As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr. )

| | | |
|---|---|---|
| Name of Political Party | : | ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM |
| *Name of the Election | : | BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025 |
| Name of State/UT | : | TAMIL NADU |

| 1 | 2 | 3 | 4 | | 5 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (A) Pending criminal cases | | (B) Details about cases of conviction for criminal offences | | |
| Sl. No. | Name of constituency | Name of candidate | Name of Court, case No. & status of the case(s) | Sections of the Acts concerned & brief description of offence(s) | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | **Maximum Punishment Imposed** |
| 1 | Biennial Elections to Council of States, 2025 | Thiru. M.DHANAPAL | Not Applicable | Demonstra-tion without getting permission from the police and disturbing the traffic. U/s. 189(2), 126(2), 292 of BNS Act. | Not Applicable | Not Applicable | Not Applicable |
| | | | Not Applicable | Demonstration without getting permission from the police and disturbing the traffic and causing nuisance to the general public. U/s. 126(2), 292, 189(2), 223 of BNS Act. | Not Applicable | Not Applicable | Not Applicable |

* In the case of election to Council of States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of Constituency.

R.M. BABU MURUGAVEL, B.A., B.L.,
Party Spokesperson,
Party Advocate's Wing Joint Secretary
All India Anna Dravida Munnetra Kazhagam, Head Office.

கோயம்புத்தூர் மாவட்டத்தில்

# உயிர் குட்டி காவலர் சாலை பாதுகாப்பு பாடத்திட்ட மாணவர்கள் பயிற்சி புத்தகம் மற்றும் ஆசிரியர் கையேடு

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார்



கோவை,ஜூன்.13-

கோயம்புத்தூர் மாவட்டம், ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கத்தில் கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் உயிர் சாலைப் பாதுகாப்பு தொண்டு நிறுவனம் இணைந்து நடத்திய நிகழ்ச்சியில் உயிர் குட்டி காவலர் சாலை பாதுகாப்பு பாடத்திட்டம் – மாணவர்கள் பயிற்சி புத்தகம் மற்றும் ஆசிரியர் கையேட்டினை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார் .இந்நிகழ்ச்சியில் கலெக்டர் பவன்குமார் க.கிரியப்பனவர் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமசந்திரன், மாநகர காவல் ஆணையர் A.சரவண சுந்தர் இணை போக்குவரத்து ஆணையர் என்.அழகரசு, முதன்மை கல்வி அலுவலர் ஆர்.பாலமுரளி, உயிர் நிர்வாக அறங்காவலர் டாக்டர். எஸ்.ராஜசேகரன், தலைவர் சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, நந்தினி ரங்கசாமி, மலர்விழி, பெற்றோர் ஆசிரியர் சங்க மாநில துணைத் தலைவர் முத்துக்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

மேலும், பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயில்வதற்கான வழிகாட்டுதல் தொடர்பான வழிகாட்டு கையேட்டினை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது,

கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் உயிர் சாலைப் பாதுகாப்பு தொண்டு நிறுவனம் இணைந்து நடத்திய நிகழ்ச்சியில் உயிர் குட்டி காவலர் சாலை பாதுகாப்பு பாடத்திட்டம் மாணவர்கள் பயிற்சி புத்தகம் மற்றும் ஆசிரியர் கையேடு இன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தை தயாரிக்கின்ற பணியில் ஈடுபட்டியிருந்த அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். தொழில்நுட்பங்களை மனிதர்கள்தான் உருவாக்கின்றார்கள். சாலை பாதுகாப்பு விதிகளை முறையாக நாம் கடைபிடிக்கவேண்டும். சாலையில் உள்ள வழிகாட்டி பலகைகளில் உள்ள அடையாளங்கள் எதனை குறிக்கின்றன? என்பதை அறிந்து வைத்திருக்கவேண்டும். இருசக்கர வாகனம் ஒட்டுபவர்கள் மட்டுமல்லாது பின்னால் உட்கார்ந்து இருப்பவர்களும் தலைக்கவசம் அணியவேண்டும் என்ற பழக்கத்தை பிறர் சொல்லாமலே நாம் கடைபிடிக்கவேண்டும். சாலை பாதுகாப்பு பணியில் காவல்துறையினர் ஈடுபட்டாலும் அவர்களுக்கு நாம் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும். பள்ளிப்பருவத்தில் இருந்தே இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த பயிற்சி புத்தகம் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

சாலையினை எவ்வாறு கடப்பது, எப்படி நடந்து செல்வது, வாகனங்களில் செல்வது உள்ளிட்ட பல்வேறு சாலைவிதிகள், மற்றும் இதுபோன்ற சாலைப் பாதுகாப்பு விதிகள் தொடர்பான வினாக்கள் பொருத்துக வடிவில் இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. வாகன ஓட்டிகள் அனைவரும் வாகனங்களில் செல்லும்போது சாலைப்பாதுகாப்பு விதிகளை முறையாக கடைபிடிக்கவேண்டும். இதனை முழுமையாக அனைவரும் கடைபிடித்தால் நல்லவளமான சமுதாயத்தை உருவாக்கமுடியும். இவ்விதிகளை முறையாக கடைபிடிக்காமல் அதிகமான சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இன்றைக்கு வெளியிடப்பட்டுள்ள புத்தகம் மற்றும் கையேட்டினை பள்ளி மாணவ மாணவியர்கள் மற்றும் ஆசிரிய பெருமக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் நினைத்தால் இத்திட்டத்தை ஒரு வெற்றிகரமான திட்டமாக கொண்டுவரமுடியும்.. மாணவர்களுக்கான எல்லாவிதமான விழிப்புணர்வையும் வழங்க வேண்டியது நம்முடைய கட்டாயமாகும். அந்தவிதத்தில் சாலைப் பாதுகாப்பு குறித்தும் நல்லதொரு விழிப்புணர்வை வழங்கவேண்டும் என ஆசிரியர்களை கேட்டுக்கொள்கிறேன். என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, குஜராத் மாநிலம் அகமதாபாத்திலிருந்து லண்டன் புறப்பட்ட விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில்

# மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் நடந்த சிறப்பு முகாம்களில் 62 பேருக்கு ரூ.84.80 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள்

## அமைச்சர்கள் சு.முத்துசாமி, மா.மதிவேந்தன் வழங்கினர்



ஈரோடு,ஜூன்.13-

ஈரோடு மாவட்டத்திற்குட்ப்பட்ட ஈரோடு, பெருந்துறை வட்டத்திற்குட்பட்ட குமாரவலசு, கவுண்டிச்சிபாளையம், கூரபாளையம், பிச்சாண்டம்பாளையம், கதிரம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் (12.06.2025) மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் நடைபெற்ற சிறப்பு முகாம்களை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் ஆகியோர் பார்வையிட்டு, 62 பயனாளிகளுக்கு ரூ.84.80 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் , ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுபேற்ற பிறகு பொதுமக்கள் நலன் கருதி பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக பொதுமக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட வேண்டுமென்றும், நீண்ட நாட்களாக தீர்வு காணப்படாமல் உள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்று பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அந்த வகையில் மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தை செயல்படுத்தி பொதுமக்களின் இருப்பிடங்களுக்கே சென்று முகாம்கள் நடத்தி மனுக்களை பெற்று அவற்றின் மீது உடனடியாக தீர்வு வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

குமாரவலசு, கவுண்டிச்சிபாளையம், கூரபாளையம், பிச்சாண்டம்பாளையம், கதிரம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாம்களில் பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, சம்மந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டு விரைவில் தீர்வு வழங்கப்பட உள்ளது. குறிப்பாக 15 அரசுத்துறை சார்ந்த 44 வகையான சேவைகள் அடையாளம் காணப்பட்டு, அதற்கு உரிய தீர்வு காணும் வகையில், இம்முகாமானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் தீர்வு வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். இம்முகாம்களிலேயே சில மனுக்கள் மீது உடனடியாக தீர்வு வழங்கப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் இதற்கு முன்பு நடத்தப்பட்ட 10 முகாம்களில் பொதுமக்களிடமிருந்து 2,356 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, 870 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும், முழுமையான தகவல்கள் அளிக்கப்படாத காரணத்தினால் 935 மனுக்கள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது. அந்த மனுக்கள் மீதும் உரிய தகவல்கள் பெறப்பட்டு நிறைவேற்றப்படும். இதில் 551 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் ஒவ்வொரு துறையிலும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் முழுமையாக பொதுமக்களை சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், ஏழை, எளிய பள்ளி குழந்தைகளின் பசியினை போக்கிட பள்ளிகளில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தில் சத்தான, தரமான உணவு, பெண்கள் அதிகளவில் பயன்பெற வேண்டுமென மாதம் ரூ.1,000 வழங்கும் மகளிர் உரிமைத்தொகை திட்டம், உயர்கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி மக்கள் நலன் காத்து வருகின்றார்கள். எனவே பொதுமக்கள் தங்கள் பகுதியிலேயே நடைபெறும் இம்முகாமினை பயன்படுத்தி, தங்களது கோரிக்கைகளை மனுக்களாக வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், குமாரவலசு ஊராட்சி, அண்ணமார் திருமண மண்டபம், கவுண்டிச்சிபாளையம் ஊராட்சி செங்குந்தர் சமுதாய கூடம், கூரபாளையம் ஊராட்சி கூரை குல மஹால், பிச்சாண்டம்பாளையம் ஊராட்சி, வசந்தம் ஹால், கதிரம்பட்டி ஊராட்சி கே.எஸ்.ஆர் மஹால் ஆகிய இடங்களில் நடைபெற்ற முகாம்களில், பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக்கொண்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கூட்டுறவுத்துறை, தொழிலாளர் நலத்துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் இலவச வீட்டுமனை பட்டா, தனி பட்டா, வீட்டுவரி பெயர் மாற்றம், மகளிர் சுய உதவிக்குழு கடன், சாதி சான்று, வாரிசு சான்று, கூட்டுறவு கடன், நேரடி பொருளாதார கடன், மருத்துவ காப்பீடு அட்டைகள், முதல்வரின் வீடுகள் மறு கட்டுமான திட்ட ஆணைகள் என மொத்தம் 62 பயனாளிகளுக்கு ரூ.84.80 இலட்சம் மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா, மாநிலங்களவை உறுப்பினர் அந் தி யூர்.ப.செ ல் வ ராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு கோட்டாட்சியர் ரவி, தனி துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) செல்வராஜ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமாசங்கர், வட்டாட்சியர்கள் ஜெகநாதன் (பெருந்துறை), முத்துகிருஷ்ணன் (ஈரோடு) உட்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஊட்டி ஆவின் பாலகத்தில்

# ரூ.13 கோடி மதிப்பில் அமையவுள்ள சீஸ் பிளாண்ட் பணிகள்: சட்டமன்ற பேரவை ஏடுகள் குழுவினர் பார்வையிட்டனர்



ஊட்டி, ஜூன்.13-

ஊட்டி ஆவின் பாலகத்தில் சுமார் ரூ.13 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள சீஸ் பிளாண்ட் பணிகளை சட்டமன்ற பேரவை ஏடுகள் குழுவினர் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்து பணிகளை விரைவாக தொடங்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினர்.

நீலகிரி மாவட்டம், ஊட்டியிலுள்ள தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் (2024-2026) இரண்டாம் நாளாக ஆய்வுக் கூட்டம் தலைவர் லட்சுமணன் மற்றும் குழுவின் உறுப்பினர்கள் தேவராஜ், பாண்டியன், வில்வநாதன் ஆகியோர் தலைமையிலும், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா ஆகியோர் முன்னிலையிலும், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய துறைகளின் ஆண்டறிக்கைகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நேற்று (12.06.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் தெரிவித்ததாவது

நீலகிரி மாவட்டத்தில் நேற்றைய தினம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஆய்வுக் கூட்டம் முடிந்த பின்னர் சில இடங்களுக்கு நேரடியாக சென்று குழு ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டது. முதலில் சிங்காரா பகுதியில் நடைபெற்று வரும் நீர்மின் திட்டப்பணிகளை குழு ஆய்வு செய்ததில், அங்கு சிறப்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அறிந்து குழு மகிழ்ச்சியடைகிறது.

அடுத்ததாக, மின் வாரியத்தின் மூலம் நடைபெற்று வரும் மாயார் நீர்மின் திட்ட பணிகளை குழு பார்வையிட்டது. அங்கும் மின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் மிகச்சிறப்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் குறித்து விளக்கி கூறிய சிங்காரா மேற்பார்வை பொறியாளர் பிரேம்குமார் மற்றும் செயற்பொறியாளர் பாலாஜி, மாயார் உதவி செயற்பொறியாளர் நவநீத கிருஷ்ணன், செயற்பொறியாளர் பிரபு ஆகியோருக்கு குழு தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.

அடுத்ததாக, தெப்பக்காடு முதுமலை சரணாலயத்தைக் குழு பார்வையிட்டது. கடை நிலை ஊழியர்களுக்கும் கருணை காட்டுபவர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் என்பதற்கு எடுத்துக்காட்டாக, யானை பாகன்களும் அவர்களது குடும்பமும் நல்ல முறையில் இருக்க வேண்டும் என்பதற்காக, முதல்முறையாக யானை பாகன்களுக்கு 44 குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சருக்கு குழுவின் சார்பாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய ஆய்வுக்கூட்டம் மற்றும் ஆய்வுப் பயணம் சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்த மாவட்ட கலெக்டர் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கும் குழுவின் சார்பாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய கூட்டத்தில் முதலாவதாக, எரிசக்தித் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ஆண்டு அறிக்கைகள் குறித்தும், இரண்டாவதாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆண்டறிக்கை குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது. எனவே, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன் சரியான தகவல்களை தெரிவிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

அதனை தொடர்ந்து குழுவின் உறுப்பினர்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், வுட்ஹவுஸ் பண்ணையினை நேரில் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகளும், ஆவின் பாலகத்தில் சுமார் ரூ.13 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள சீஸ் பிளேண்ட் தொடர்பான பணிகளை பார்வையிட்டு, பணிகளை விரைவாக முடித்து, உற்பத்தியை தொடங்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சென்னை வெ.சவிதா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை பொறியாளர் (பொறுப்பு) மோகன்தாஸ், ஆவின் பொது மேலாளர் மரு.ஜெயராமன், செயற்பொறியாளர் செல்வக்குமார், சிறப்பு அலுவலர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முனைவர் ஸ்ரீராம், நிதி கட்டுப்பாட்டு அலுவலர் நா.பிரபாகரன், நீலகிரி மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் க.சேகர், மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணாதேவி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பிரம்மவித்யா நாயகி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் சரவணன், சட்டமன்ற பேரவை குழுவின் இணைச் செயலாளர்கள் பூபாலன், சாந்தா, துணை நிதி கட்டுப்பாட்டு அலுவலர் சுரேஷ், உதவி செயற்பொறியாளர் சங்கீதா, கணக்கு மேற்பார்வையாளர் நீலகிரி மின் பகிர்மான வட்டம் கு.த.பெலிக்ஸ் பிரபாகரன் உட்பட பலர் உடனிருந்தனர்.



நீலகிரி மாவட்டம் குந்தா மேற்கு ஒன்றிய அ.தி.மு.க. செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள கல்லக்கொரை ராஜேஷ், ஊட்டியில் மாவட்ட அலுவலகத்தில், மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத்திற்கு மலர்கொத்து கொடுத்து வாழ்த்து பெற்றார். அப்போது பேரவை மாவட்ட இணை செயலாளர் கல்லக்கொரை பாபு, ஊர்தலைவர் ராஜ்குமார், சந்திரன், முருகன் உட்பட பலர் உடனிருந்தனர்.

# ஊட்டியில் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் உறுதிமொழி ஏற்பு



ஊட்டி, ஜூன்.13-

நீலகிரி மாவட்ட கூடுதல் கலெக்டர் அலுவலகத்தில் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், அனைத்து அரசுத் துறை அலுவலர்கள் உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.

அப்போது இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒரு போதும் எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும், பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தை தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், தமிழ்நாட்டை குழந்தை தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன் எனவும், உளமார உறுதி கூறுகிறேன் என்ற உறுதி மொழியினை மாவட்ட கலெக்டர் வாசிக்க அவர்களை பின்தொடர்ந்து, அனைத்துத்துறை அலுவலர்கள் ஏற்றுக் கொண்டனர்.

முன்னதாக மாவட்ட கலெக்டர் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்திட்டு, விழிப்புணர்வு பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், தொழிலாளர் துறை உதவி ஆணையர் (அமலாக்கம்) தாமரை மணாளன், சமூக பாதுகாப்புத்திட்டம் தனித் துணை ஆட்சியர் ராதாகிருஷ்ணன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.சோமசுந்தரம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சுரேஷ்கண்ணன் உட்பட அனைத்துத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



நீலகிரி மாவட்ட அ.தி.மு.க. இளைஞரணி மாவட்ட துணை செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள நகர்மன்ற கவுன்சிலர் அன்புச் செல்வன், மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத்திற்கு சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார்.



நீலகிரி மாவட்டம், கேத்தி பேரூராட்சி அலுவலக வளாகத்தில் செயல் அலுவலர் புவனேஷ்வரி தலைமையில் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழியை அனைத்து பணியாளர்களும் ஏற்றுக்கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை சுங்க சாவடி அருகே நடந்த வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கை திறந்து வைத்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை முன்னாள் சிட்கோ வாரிய தலைவர் சிந்து ரவிச்சந்திரன் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். அருகில் அமைச்சர் முத்துசாமி உள்ளார்

## ஈரோடு மாவட்டம் பெருந்துறையில்

# வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்- ஆயிரக்கணக்கான விவசாயிகள், பொதுமக்கள் ஆர்வமுடன் கண்டுகளிப்பு



**ஈரோடு,ஜூன்.13-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 11.6.2025 அன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை- விஜயமங்கலம் பகுதியில், வேளாண்மை-உழவர் நலத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்- 2025" கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டு, கருத்தரங்கத்தினைத் தொடங்கி வைத்தார்.

இக்கண்காட்சியில் அரசுத்துறையின் சார்பில் 76 அரங்குகளும், தனியார் துறை சார்பில் 155 அரங்குகளும், 36 வெளி அரங்குகளும் மற்றும் 15 கருத்து காட்சி அரங்குகளும் என மொத்தம் 282 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அரசின் அனைத்துத் திட்டங்கள் மற்றும் பல்வேறு வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தற்போதைய அனைத்து விவரங்களை உழவர்கள், மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்தும் அமைப்புகள், ஏற்றுமதியாளர்கள் இயற்கை நல ஆர்வலர்கள் ஆகியோர் ஒரேஇடத்தில் அறிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்- 2025" -யை மாநிலத்தின் அனைத்து பகுதியில் இருந்தும் நேற்றைய தினம் சுமார் 30,000-க்கும் மேற்பட்டவர்களும், 12.06.2025 இன்று 35,000 -க்கும் மேற்பட்டவர்களும் பார்வையிட்டு பயன்பெற்று வருகின்றார்கள்.

மேலும், விவசாய பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று நாளை 13.06.2025 (வெள்ளிக்கிழமை) வரை நீட்டிக்கப்பட்டு கண்காட்சி நடைபெற உள்ளது.

வேளாண் கண்காட்சியில் வேளாண் உற்பத்திக்குத் தேவையான பல்வேறு பயிர்களின் புதிய இரக விதைகள், காய்கறி விதைகள், மா, கொய்யா உள்ளிட்ட பழ வகைகளின் ஒட்டு இரகக் கன்றுகள், தென்னையில் வீரிய ஒட்டுக் கன்றுகள், நுண்ணூட்ட உரக்கலவைகள், உயிர் உரங்கள், இயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்கள் மற்றும் நவீன உபகரணங்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன் விற்பனையும் செய்யப்படுகின்றன.

இவற்றை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் செடிகள் மற்றும் மரக்கன்றுகளை ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பங்களை ஆர்வமுடன் பார்வையிட்டு, விளக்கம் பெற்று செல்கின்றனர்.

11.06.2025 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் வேளாண்மை இயந்திரமயமாக்குதலில் உள்ள சவால்களும் தீர்வுகளும், மண்வளம் காக்கும் உயிர்ம வேளாண்மை வலுப்படுத்துதல் மற்றும் வழிமுறைகளும், காலநிலை மாற்றங்களை தாங்கவல்ல வேளாண்மை தொழில்நுட்பங்கள், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோட்டிக்ஸ் ஆகிய தலைப்புகளில் வேளாண் வல்லுநர்கள் கருத்துகளை வழங்கினார்கள்.

12.06.2025 இன்று உயர் விளைச்சல் கரும்பும் உன்னத பலன்களும், உழவர்களின் வருமானத்தை பெருக்கும் வழிமுறைகள், இடைத்தரகரில்லா வேளாண் சந்தை - டிஜிட்டல் மார்க்கெட்டிங் தளங்கள், வேளாண் வணிகம் மற்றும் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், நஞ்சில்லா, வாழை கரும்பு, மரவள்ளி மற்றும் மஞ்சள் உற்பத்திக்கான பூச்சி மற்றும் நோய் மேலாண்மை நுட்பங்கள், அடுத்த தலைமுறைக்கான தோட்டக்கலை பண்ணையம், வேளாண் காடுகள் மற்றும் வனவியல் தொழில்நுட்பங்கள், மகத்துவ மஞ்சள் சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்துதல், வளம் தரும் உயர் விளைச்சல் வாழை சாகுபடி, தென்னையில் பூச்சி, நோய் மேலாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் தென்னையில் மதிப்பு கூட்டுதல், உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம் செயல்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல் மற்றும் மீன் வளர்ப்பு தொழில்நுட்பம் மற்றும் வாய்ப்புகள் ஆகிய தலைப்புகளில் வேளாண் வல்லுநர்கள் கருத்துகளை வழங்குவதோடு, விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்து வருகின்றார்கள். வேளாண் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் இக்கண்காட்சியினை பார்வையிட்டு பயன்பெற வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் 28,800 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்

**ஈரோடு, ஜூன். 13 -**

ஈரோடு மாவட்டம் கோபி அருகே உள்ள கொடிவேரி அணையில் இருந்து தடப்பள்ளி அரக்கன்கோட்டை வாய்க்காலில் திறந்து விடப்படும் தண்ணீர் மூலம் 25 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.கடந்தாண்டு டிசம்பர் மாதம் 2 ம் போகத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டு, நெல் அறுவடை பணி நிறைவடைந்துள்ளன.இப்பாசன பகுதிகளுக்கு உட்பட்ட கூகலூர், பாரியூர், கரட்டடிப்பாளையம், நஞ்சை புளியம்பட்டி, மேவாணி மற்றும் காலிங்கராயன் பாசனத்திற்கு உட்பட்ட 40 க்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கிடங்கு சார்பில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டன. இந்த கொள்முதல் நிலையங்கள் மூலம் 28 ஆயிரத்து 800 மெட்ரிக் டன் நெல் கொள்முத ல் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இது குறித்து கூறியதாவது:

தடப் பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனத்திற்குட்பட்ட பகுதிகளில் 40 க்கும் மேற்பட்ட இடங்களில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு. -நெல் கொள்முதல் செய்யப்பட்டன. நெல் அறுவடை நிறைவடைந்து, தற்போது பாசனத்திற்கு திறக்கப்பட்டுள்ளன. இணைப்புகள் 37 நெல் கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டது. பாசனப்பகுதியில் 28 ஆயிரத்து 800 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தடப்பள்ளி அரக்கன் கோட்டை. காலிங்கராயன் , பாசனப்பகுதியில் 5485 விவசாயிகளுக்கு ரூ.69.49 கோடி கணக்கில் பணம் வங்கி வரவு வைக்கப்பட்டுள்ளது. இதேபோல் கீழ்பவானி பாசனத்துக்கு உட்பட்ட பெத்தாம்பாளையம், நல்லாம்பட்டி, கொடுமுடி உள்ளிட்ட 4 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் செய்யப்படுகிறது.. இவ்வாறு கூறினர்.


## அதிகரட்டி பேரூராட்சி அலுவலம்,
அதிகரட்டி அஞ்சல், நீலகிரி மாவட்டம்.

ந.க.எண்.128/2025 நாள் : 10.06.2025

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

நீலகிரி மாவட்டம், அதிகரட்டி பேரூராட்யில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2025–2026ன்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 18.06.2025–ம் நாள் 3.00 மணி வரை மின்னணு ஒப்பந்தப்புள்ளி வாயிலாக செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் வரவேற்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 18.06.2025 அன்று மாலை 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் மின்னணு மூலம் திறக்கப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2025–2026

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) | டேவணித் தொகை | ஒப்பந்த முறை |
|---|---|---|---|---|
| 1. | CONSTRUCTION OF SHED AT MUTTI NADU GRAVEYARD PANCHAYAT IN ADIGARATTY TOWN | 6.00 | 6000/– | இணைய வழி |
| 2. | CONSTRUCTION OF STORAGE WATER TANK (30,000 Lit) AT KUNNA COMBAI IN ADIGARATTY TOWN PANCHAYAT | 10.00 | 10000/– | இணைய வழி |

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை 18.06.2025–ம் நாள் மதியம் 3.00 மணிவரை அதற்கான டேவணி தொகையினை பேரூராட்சி வங்கி கணக்கில் (வங்கி கணக்கு எண் 10946973684)–ல் Online மூலம் செலுத்தி, அதற்கான செலுத்து சீட்டினை இணைய வழி ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். http://townpanchay-ats, tn.gov.in/tender என்ற இணையதளத்தில் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்களையும் தெரிந்துக்கொள்ளலாம். இதர விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்துக்கொள்ளலாம்.

ஒம்/– தலைவர்
அதிகரட்டி பேரூராட்சி

ஒம்/– செயல் அலுவலர்
அதிகரட்டி பேரூராட்சி

வெ.ஆ.எண்.45/2025/செ.ம.தொ.அ/ஒ.பு/ நீலகிரி மாவட்டம்.


# நந்தா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் பொறுப்புகள் ஏற்பு விழா



**ஈரோடு ஜூன் 13-**

ஈரோடு மாவட்டத்தின் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் கீழ் செயல்பட்டு வரும் நந்தா கல்வி குழுமத்தில் புதிய மூன்றாம் தலைமுறையினரான மருத்துவர் என். ஆரியபிரசன்னா மற்றும் மருத்துவர் என். சுதீக்ஷா ஆகியோர் உறுப்பினர்களாக அதிகாரபூர்வமாக இணைந்தார்கள்.இதனைத் தொடர்ந்து ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் ஆசியுடன் நந்தா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் பணிகளை இருவரும் ஏற்றுக் கொண்டார்கள்.இதற்கான விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் தபானுமதி சண்முகன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.இவ்விழாவில் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் .எஸ்.நந்தகுமார் பிரதீப், மற்றும் நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.திருமூர்த்தி ஆகியோர் இருவரையும் ஆசிர்வதித்து தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவத் துறை தலைவர் மருத்துவர் சங்கரேஸ்வரி வரவேற்று பேசினார்.மேலும், நந்தா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் புலமுதல்வர் மருத்துவர் ஏ. சந்திரபோஸ், மருத்துவ மேற்பார்வையாளர் மருத்துவர் வி. சுந்திரவேல், முதன்மை நிதி அலுவலர் . சிவபிரகாசம், நந்தா இந்திய மருத்துவம் மற்றும் துணை மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த முதல்வர்கள் அனைவரும் கலந்து கொண்டு மருத்துவர் என். சூரியபிரசன்னா மற்றும் மருத்துவர் என். சுதீக்ஷா ஆகியோரை ஆசிர்வதித்து வாழ்த்தினர்கள். மருத்துவர் என். சூரியபிரசன்னா மற்றும் மருத்துவர் என். சுதீக்ஷா ஆகியோர் நன்றி கூறினார்கள்

# புதிதாக நியமிக்கப்பட்ட கேத்தி பகுதி அதிமுக பொறுப்பாளர்கள் மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத்திடம் வாழ்த்து பெற்றனர்



**ஊட்டி, ஜூன்.13-**

நீலகிரி மாவட்ட அ.தி.மு.க. வில் புதிதாக நியமிக்கப்பட்ட கேத்தி பகுதியைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் மாவட்ட கழக செயலாளர் கப்பச்சி வினோத்திடம் வாழ்த்து பெற்றனர்.

நீலகிரி மாவட்ட அ.தி.மு.க.வில், மாவட்ட, ஒன்றிய, பேரூராட்சிக்கழகம் மற்றும் சார்பு அணிகளுக்கு புதியதாக நிர்வாகிகள் தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர். நேற்று ஊட்டியிலுள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் கப்பச்சி டி.வினோத்தை சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றனர். இதில் கேத்தி பேரூராட்சிக்குட்

பட்ட பகுதிகளிலிருந்து 6 பேர் மாவட்ட பொறுப்புக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதில் மாவட்ட புரட்சித் தலைவி பேரவை மாவட்ட தலைவராக என்.பி.ராஜூ, மாவட்ட விவசாய பிரிவு இணைச்செயலாளராக கிரீன் டெக் மகேஷ், மாவட்ட சிறுபான்மையினர் நலப்பிரிவு துணை செயலாளராக அப்துல் ரசாக், மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை இணை செயலாளராக சாய்பரத், மாவட்ட கலைப்பிரிவு துணை தலைவராக கார்த்திகேயன், இணை செயலாளராக தியாகராஜன் ஆகியோர் மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத்திற்கு சால்வை அணிவித்தும், மலர்கொத்து வழங்கியும் வாழ்த்து பெற்றனர். அவர்களை சிறப்பாக செயல்பட்டு வரும் தேர்தலில் உங்கள் பகுதியில் கழக வேட்பாளருக்கு அதிகப்படியான வாக்குகளை பெற்றுத்தர பாடுபட வேண்டும் என்றார். அப்போது அமைப்பு செயலாளர் கே. ஆர்.அர்ஜூணன், பேரவை மாவட்ட செயலாளர் சாந்திராமு, மாவட்ட கழக துணை செயலாளர் கோபாலகிருஷ்ணன், கேத்தி பேரூராட்சிக்கழக செயலாளர் ஜெய்(என்ற) ராதாகிருஷ்ணன் உட்பட பலர் உடனிருந்தனர்.


## NOTICE

Take Notice that my client K.RAMESHKUMAR has filed an application before RDO, Udhagamandalam under section 13(3)of Registration of Births and Deaths Act 1969, read with Rule 9(3) of the Tamil Nadu Registration of Births and Deaths Rules, 2000 to register the death of Mrs.RAGINI died on 30.10.2002 at Door No.2/188, Ithalar Village and Post,Kundah Taluk, The Nilgiris.

J.H.Maheswari, B.A.L.,LL.B.,
Advocate/Notary Public,
Udhagamandalam, The Nilgiris.



கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
குன்னூர்

T.R.லலிதா, க.பெ. M.ஆனந்தன்,
கதவு எண். 5/131A1,
அச்சனக்கல் கிராமம்,
கேத்தி அஞ்சல், குன்னூர்
தாலுகா, நீலகிரி மாவட்டம்.
-----மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர் அவர்கள்,
குன்னூர்.
-------- எதிர்
மனுதாரர்

அறிவிப்பு

எனது மகள் தேவி நிவேதிதா. A த.பெ. எம்.ஆனந்தன் கடந்த 19.05.1986 அன்று கதவு எண். 5/131A1, அச்சனக்கல் கிராமம், கேத்தி அஞ்சல், குன்னூர் தாலுகா, நீலகிரி மாவட்டம் என்ற முகவரியில் பிறந்தார். அவரது பிறப்பு சான்றிதழ் கேட்டு குன்னூர்னூனூர் உதகமண் கோட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளேன். இது குறித்து யாருக்காவது ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 10 நாட்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
T.R.லலிதா,
மனுதாரர்.


# ஊட்டியில் செவித்திறன் குறையுடையோருக்கான பள்ளியில் மாணவர் சேர்க்கை: கலெக்டர் தகவல்

**ஊட்டி, ஜூன்.13-**

நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

கடந்த 50 ஆண்டுகளாக செவித்திறன்குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி கார்டன் சாலையில் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் ஒவ்வொரு கல்வியாண்டுக்கும் 110 மாணவ மாணவியர்கள் பயில கட்டமைப்பு உள்ளது.

2025-2026 ஆம் கல்வியாண்டில் செவித்திறன் குறையுடைய மாணவ மாணவியர்கள் முன்பருவ வகுப்பு முதல்; 10 ஆம் வகுப்பு வரை சேர்க்கப்படும் மாணவ மாணவியர்களுக்கு இலவச கல்வி, உணவு, உறைவிடம் (மாணவமாணவியர்களுக்கு தனித்தனியே விடுதி வசதிகள்); மற்றும் சீருடைகள் அனைத்தும் அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தகுதியுடைய செவித்திறன் குறையுடைய மாணவமாணவியர்கள் இச்சிறப்புபள்ளியில் சேர்ந்து அரசின் அனைத்து உதவிகளையும் பெற்று பயனடையவும், சைகைமொழி மற்றும் உதட்டபியாசம் மூலம் பாடங்கள் சிறப்பாக சிறப்பு பயிற்சி பெற்ற சிறப்பாசிரியர்கள் மூலம் கற்பிக்கப்பட்டு வருகிறது. மேலும் இப்பள்ளியில் திறன் வகுப்பறை, கணினி ஆய்வகத்தில் கணினி பயிற்றுனர் மூலம் கணினி பயிற்சி அளிக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை (ரூ 2000 முதல் 8000 ) பெற்று தரப்படும்.செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி தொலைபேசி 0423-2440725, 0423-2450700 மற்றும் அலைபேசி 9865847536 எண்ணில் தொடர்பு கொண்டு ஊட்டி கார்டன் சாலையில் அமைந்துள்ள செவித்திறன் குறையுடையோக்கான அரசு உயர்நிலைப்பள்ளியில் சேர்த்து பயன் பெறுமாறு நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.


Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



## Format C-1

( for candidate to publish in Newspapers, TV )

Declaration about criminal cases

( As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr. )

**Name and address of candidate** : **M.DHANAPAL,**
S/o. M. Madurai,
1/1, Vasuvasamuthram Road,
Prabilimedu, Pudupattinam, Kalpakkam,
Chengalpattu District – 603 102.

**Name of Political Party** : **ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM**

**Name of Election** : **BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025***

**Name of Constituency** : **BIENNIAL ELECTIONS TO COUNCIL OF STATES, 2025**

I, M. DHANAPAL, a candidate for the above mentioned election, declare for public information the following details about my criminal antecedents:

**(A)** Pending criminal cases

| Sl. No. | Name of Court | Case No. and dated | Status of Case(s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| I | Not Applicable | i) Cr.No. 685/2024 Maduranthakam, PS | Under investigation | I U/s. 189(2), 126(2), 292 of BNS Act. Demonstration without getting permission from the police and disturbing the traffic. |
| | | ii) Cr. No. 77/2025 Thirukazhukundram, PS | Under investigation | ii) U/s. 126(2), 292, 189(2), 223 of BNS Act. Demonstration without getting permission from the police and disturbing the traffic and causing nuisance to the general public. |

**(B)** Details about cases of conviction for criminal offences

| Sl. No. | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | **Maximum Punishment Imposed** |
|---|---|---|---|
| 1. | Not Applicable | Not Applicable | Not applicable |

* In the case of election to Council of States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of Constituency.

**M. DHANAPAL**
AIADMK Candidate
Biennial Elections to Council of States, 2025

## உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி:
# முதல் இன்னிங்சில் 138 ரன்களுக்கு சுருண்டது தென்னாப்பிரிக்க அணி

**லார்ட்ஸ், ஜூன் 13-**

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் முதல் இன்னிங்சில் ஆஸி. கேப்டன் பாட் கம்மின்ஸ் அசத்தல் பந்துவீச்சால் தெ.ஆ. அணி 138 ரன்களுக்கு சுருண்டது.



**இறுதிப் போட்டி...**

லண்டனில் நடைபெற்று வரும் டபிள்யூ.டி.சி. இறுதிப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஆஸி. 121க்கு ஆல் அவுட் ஆக முதல் நாள் முடிவில் தெ.ஆ. 43/4 ரன்கள் எடுத்திருந்தது. இரண்டாம் நாளில் சிறப்பாகவே தொடங்கிய தென்னாப்பிரிக்க அணியின் கேப்டன் டெம்பா பவுமா 36 ரன்களுக்கு ஆட்டமிழந்தார்.

**பாட் கம்மின்ஸ் அபாரம்...**

அதற்குப் பிறகு நிதானமாக ஆடிய டேவிட் பெடிங்ஹாம் 445 ரன்கள் எடுத்து அணியை ஓரளவுக்கு நல்ல நிலையில் தூக்கி நிறுத்தினார். இருப்பினும், பாட் கம்மின்ஸின் சிறப்பான பந்துவீச்சினால் தெ.ஆ. அணி சுருண்டது. முதல் இன்னிங்ஸில் ஆஸி. கேப்டன் பாட் கம்மின்ஸ் 40-ஆவது ஓவரில் 2 விக்கெட்டுகளை எடுத்து ஆட்டத்தை மாற்றினார். கடைசியில் கம்மின்ஸ் 6 விக்கெட்டுகளுடன் முடித்தார்.

**74 ரன்கள் பின்னிலை...**

மிட்செல் ஸ்டார்க் 2, ஜோஷ் ஹேசில்வுட் 1 விக்கெட்டும் எடுத்தார்கள். தெ.ஆ. அணி சார்பில் அதிகபட்சமாக டேவிட் பெடிங்ஹாம் 45 ரன்கள் குவித்தார். தென்னாப்பிரிக்க அணி 74 ரன்கள் பின்னிலையில் இருக்கிறது. ஆஸி. தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கவிருக்கிறது.

# சர்வதேச செஸ் போட்டிகளில் வென்ற தமிழக வீரர்களுக்கு உதயநிதி வாழ்த்து

**சென்னை, ஜூன் 13-**

சர்வதேச செஸ் போட்டிகளில் வென்ற தமிழக வீரர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**வாழ்த்து...**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நார்வே செஸ் போட்டியில் மூன்றாவது இடத்தை பிடித்த நடப்பு இளம் உலக சாம்பியனும், மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருது பெற்றவருமான டி. குகேஷ், ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டியில் முதலிடம் பிடித்த அரவிந்த் சிதம்பரம் மற்றும் இரண்டாம் இடம் பிடித்த ர.பிரக்ஞானந்தா ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

**எலைட் திட்டத்தின் கீழ்...**

அரவிந்த் சிதம்பரம், ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டியில் முதல் இடத்தை பிடித்ததன் மூலம் தற்போது பிடே உலக தரவரிசை பட்டியலில் முதல் 10-தர இடங்களுக்குள் நுழைந்துள்ளார். அரவிந்த் சிதம்பரம், டி.குகேஷ் மற்றும்ர. பிரக்ஞானந்தா இருவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான எலைட் திட்டத்தின் கீழ் பயன் பெற்று வருகின்றனர்.

**நிதியுதவி...**

சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்கள் தங்களை மேலும் தயார்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின் எலைட் திட்டத்தின் கீழ் ஆண்டிற்கு ரூ. 30 லட்சம் பாய் வழங்கப்படுகின்றது. விளையாட்டு வீரர்கள் தங்களுக்கு தேவையான அதிநவீன உபகரணங்களை வாங்கிக் பயன்படுத்தவும், வெளிநாடுகளுக்கு சென்று சிறந்த பயிற்சியாளர்களிடம் பயிற்சி மேற்கொள்ளவும், தொடர்ந்து சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்று தங்களது திறமையை வெளிப்படுத்துவதற்காகவும் எலைட் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகின்றது.

**முன்னணி இடமாக...**

நார்வே செஸ் போட்டி, ஸ்டீபன் அவாக்யன் நினைவு செஸ் போட்டி ஆகியவற்றில் முன்னணி இடங்களை வென்றதன் மூலம் உலக டாப் 10 தரவரிசையில் இருக்கும் நான்கு இந்திய வீரர்களில் மூன்று பேர் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என்பது விளையாட்டில் உலக அளவில் முன்னணி இடமாக தமிழ்நாட்டினை உருவாக்கி வரும் துணை முதல்வரின் முயற்சிகளுக்கு சிறப்பு சேர்பதாக அமைந்துள்ளது.என தெரிவிக்கப் பட்டுள்ளது .



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நார்வே மற்றும் ஆர்மேனியா நாடுகளில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டிகளில் முன்னணி இடங்களை வென்ற செஸ் வீரர்கள் டி.குகேஷ், அரவிந்த் சிதம்பரம், ர.பிரக்ஞானந்தா ஆகியோருக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.

# விமான விபத்து: மீட்புப்பணிகளில் உதவிய இந்திய ராணுவத்தினர்

**புதுடில்லி, ஜூன் 13-**

ஆமதாபாத்தில் நடந்த விமான விபத்தைத் தொடர்ந்து நடக்கும் மீட்புப் பணிகளில் இந்திய ராணுவத்தினர் உதவி வருகின்றனர்.

ஆமதாபாத்தில் இருந்து லண்டனுக்கு கிளம்பிய ஏர் இந்தியா விமானம் நொறுங்கி விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணித்த ஒருவரை தவிர மற்ற அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மேலும், விமானம் விபத்துக்குள்ளான இடத்தில் இருந்த மருத்துவ கல்லூரி விடுதி மீதும் விழுந்தது. இதில் மாணவர்கள் 5 பேர் உயிரிழந்துள்ளனர். சிலர் காயமடைந்தனர்.

இந்நிலையில் இந்திய ராணுவம் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: ஆமதாபாத்தில் நடந்த விமான விபத்தைத் தொடர்ந்து நடக்கும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டோருக்கு உதவி செய்ய 130 பேரை அனுப்பிவைத்துள்ளோம். இந்த குழுவில் இடிபாடுகளை அகற்றும் ஜே.சி.பி. குழுவினர், மருத்துவக் குழுவினர், அதிவிரைவு குழுவினர், தீயை அணைக்கும் கருவிகளுடன் தீயணைப்பு வீரர்கள் அதிகாரிகள் உள்ளிட்ட பொறியியல் குழுவினர் உதவி வருகின்றனர். ராணுவ மருத்துவமனையும் தயார் நிலையில் உள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

# அதிக அரைசதம்: சச்சின் சாதனையை முறியடித்தார் ஆஸி. வீரர் ஸ்டீவ் ஸ்மித்

**லார்ட்ஸ், ஜூன் 13-**

ஐ.சி.சி. நாக் அவுட் போட்டிகளில் அதிக அரைசதம் அடித்தவர்களின் பட்டியலில் சச்சினை ஸ்டீவ் ஸ்மித் முந்தியுள்ளார்.



**டெஸ்ட் சாம்பியன்ஷிப்...**

டெஸ்ட் கிரிக்கெட்டை வளர்க்கும் நோக்கில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கடந்த 2019-ம் ஆண்டு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் என்ற ஐ.சி.சி. தொடரை உருவாக்கியது. இதன் முதலாவது சீசனில் நியூசிலாந்து அணியும், 2-வது சீசனில் ஆஸ்திரேலிய அணியும் கோப்பையை கைப்பற்றின. இந்த 2 சீசன்களிலும் இந்திய அணி 2-வது இடம் பெற்றது.இதனையடுத்து 3-வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி இங்கிலாந்தில் உள்ள லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது.

**ஸ்டீவ் ஸ்மித் 66 ரன்...**

டாஸ் வென்ற தென்ஆப்பிரிக்கா பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய ஆஸ்திரேலியா அணி தென் ஆப்பிரிக்காவின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாத அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து 212 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. அதிகபட்சமாக வெப்ஸ்டர் 72 ரன்களும் ஸ்டீவ் ஸ்மித் 66 ரன்களும் அடித்தனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் ரபாடா 5 விக்கெட்டும் யான்சன் 3 விக்கெட்டும் வீழ்த்தினர். இதனையடுத்து பேட்டிங் ஆடிய தென் ஆப்பிரிக்கா அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. முதல் நாள்முடிவில் தென் ஆப்பிரிக்கா 4 விக்கெட் இழப்பிற்கு 43 ரன்கள் அடித்துள்ளது. கேப்டன் பவுமா 3 ரன்களுடனும் பெடிங்ஹாம் 8 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

**முறியடிப்பு...**

இப்போட்டியில் அரைசதம் அடித்ததன் மூலம் சச்சினின் மிக முக்கியமான சாதனையை ஸ்டீவ் ஸ்மித் முறியடித்துள்ளார். ஐ.சி.சி. நாக் அவுட் போட்டிகளில் அதிக அரைசதம் அடித்தவர்களின் பட்டியலில் சச்சினை ஸ்டீவ் ஸ்மித் முந்தியுள்ளார். ஐ.சி.சி. நாக் அவுட் போட்டிகளில் சச்சின் 6 அரைசதங்கள் அடித்துள்ள நிலையில், ஸ்டீவ் ஸ்மித் 7 அரைசதங்கள் அடித்து சச்சினின் சாதனையை முறியடித்துள்ளார். அதே சமயம் இப்பட்டியலில் 10 அரைசதங்களுடன் யாரும் நெருங்க முடியாத உயரத்தில் விராட் கோலி உள்ளார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

**மேட்டூர், ஜூன் 13-**

மேட்டூர் அணை நீர்வரத்து வினாடிக்கு 6,339 கன அடியாக உயர்ந்துள்ளது.

மேட்டூர் அணை நீர்மட்டம் கடந்த ஆண்டு அக்டோபர் 23-ஆம் தேதி 100 அடியாக உயர்ந்தது. அதன் பிறகு காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டாலும், தொடர் மழை காரணமாக மேட்டூர் அணை நீர்மட்டம் 100 அடிக்குக் கீழே குறையாமல் இருந்து வருகிறது. காவிரியின் நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக புதன்கிழமை காலை அணைக்கு வினாடிக்கு 5,146 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த நீர் வரத்து வியாழக்கிழமை காலை வினாடிக்கு 6,339 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 114.62 அடியிலிருந்து 114.91 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 85.58 டிஎம்சியாக உள்ளது.

# இந்தியாவை உலுக்கிய விமான விபத்துகள்

**அகமதாபாத், ஜூன் 13-**

குஜராத் மாநிலம் அகமதாபாத்தின் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து லண்டன் (காட்வீக்) புறப்பட்ட ஏர் இந்தியா போயிங் 787 விமானம் விமானம் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தில் 242 பேர் பயணம் செய்துள்ள நிலையில், இதுவரை 170 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், பலி எண்ணிக்கை உயரக்கூடும் எனவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்தியாவில் கடந்த காலங்களில் இதுபோன்று பல்வேறு இடங்களில் விமான விபத்துகள் நடைபெற்றுள்ளது. இதில், இந்தியாவை உலுக்கிய 10 பெரிய விமான விபத்துகள் குறித்து பார்ப்போம்.

* கடந்த 2020-ல் கோழிக்கோடு பகுதியில் பதிவாகியுள்ளது. இதில் 21 பேர் உயிரிழந்தனர்.

* துபாயில் இருந்து வந்த ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் 1344 காலிகட் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளாகி 21 பேர் உயிரிழந்துள்ளனர். இதில், விமானம் விழுந்து ஓடுபாதையில் இருந்து சறுக்கி இரண்டாக உடைந்தது.

* மே 22, 2010, மங்களூர் விமான விபத்து: ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் 812 மங்களூரில் ஓடுபாதையை விட்டு விலகி ஏற்பட்ட விபத்தில் 158 பேர் உயிரிழந்தனர்.

* ஜூலை 17, 2000, பாட்னா விமான விபத்து: அலையன்ஸ் ஏர் விமானம் 7412-ல் போயிங் 737 விமானம் பாட்னாவில் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். விமானம் கட்டுப்பாட்டை இழந்ததே காரணம் ஆகும்.

* நவம்பர் 12, 1996, சார்கி தாத்ரி நடுவானில் மோதியது: சவுதி அரேபியன் ஏர்லைன்ஸ் போயிங் 747 மற்றும் கஜகஸ்தான் ஏர்லைன்ஸ் இலியுஷின் இல்-76 ஆகியவை டெல்லி அருகே மோதி விபத்துக்குள்ளானது. இரு விமானங்களிலும் இருந்த 349 பேரும் உயிரிழந்தனர். விமானியின் தவறு மற்றும் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுடன் தவறான தொடர்பு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டது.

* ஏப்ரல் 26, 1993, அவுரங்காபாத் விமான விபத்து: இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் 491, போயிங் 737, அவுரங்காபாத்தில் இருந்து புறப்பட்ட நிலையில் விபத்துக்குள்ளானது. இதில், ஒரு டிரக் மற்றும் மின் கம்பிகளில் மோதி 55 பேர் உயிரிழந்தனர்.

* ஆகஸ்ட் 16, 1991, இம்பால் விமான விபத்து: இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் 257 இம்பால் அருகே விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த 69 பேரும் உயிரிழந்தனர்.

* பிப்ரவரி 14, 1990, பெங்களூரு விமான விபத்து: இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் 605, ஏர்பஸ் A320, பெங்களூருவை நெருங்கும் போது விபத்துக்குள்ளானது. இதில், 92 பேர் உயிரிழந்தனர்.

* அக்டோபர் 19, 1988, அகமதாபாத் விமான விபத்து: இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் 113 அகமதாபாத்தில் விபத்துக்குள்ளானது. இதில், 133 பேர் உயிரிழந்தனர்.

* ஜூன் 21, 1982, பம்பாய் விமான விபத்து: ஏர் இந்தியா விமானம் 403 பம்பாய் விமான நிலையத்தில் விபத்துக்குள்ளானது. இதில், 17 பேர் உயிரிழந்தனர்.

* ஜனவரி 1, 1978, பம்பாய் விமான விபத்து: ஏர் இந்தியா போயிங் 747 விமானம் மும்பையில் இருந்து புறப்பட்ட பிறகு அரபிக் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், பயணித்த 213 பேரும் உயிரிழந்தனர்.

## ஆர்.சி.பி. அணியை வாங்க நான் பைத்தியக்காரனா?
# கர்நாடக துணை முதல்வர் ஆவேசம்

**பெங்களூரு, ஜூன் 13-**

ஆர்.சி.பி. அணியை வாங்க நான் பைத்தியக்காரன் இல்லை என கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் கூறியுள்ளார்.

**11 பேர் உயிரிழப்பு...**

ஐ.பி.எல். தொடங்கிய 18 ஆண்டுகளில் ஆர்.சி.பி. இந்தாண்டு முதல்முறையாக கோப்பையை வென்றது. இந்த வெற்றிக் கொண்டாட்டத்தில் 11 பேர் உயிரிழந்தனர். இந்த உயிரிழப்பு விவகாரத்தில் ஆர்.சி.பி. நிர்வாகிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், கர்நாடக கிரிக்கெட் சங்கத்தின் பொருளாளர், செயளாலர் ராஜிநாமா செய்தார். விராட் கோலி மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**பைத்தியக்காரன் இல்லை...**

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து ஆர்.சி.பி. அணியை விற்கப் போவதாக அறிவிக்கப்பட்டது. இதனை கர்நாடகத்தின் துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் வாங்குவதாக தகவல் வெளியாகியது. இது குறித்து அவர் பேசியதாவது: நான் பைத்தியக்காரன் இல்லை. எனது இள வயதில் இருந்தே நான் கார்நாடக கிரிக்கெட் சங்கத்தின் உறுப்பினராக இருந்துள்ளேன். அப்போதே இருந்தே எனக்கு அதில் பங்குபெற அழைப்பு விடுக்கப்பட்டாலும் எனக்கு நேரம் இருந்ததில்லை.

**நேரமில்லை...**

எனது கல்வி நிறுவனத்தைக் கூட பார்த்துக்கொள்ள நேரமில்லாமல் எனது குடும்பத்தினருக்கு மாற்றிவிட்டு நான் ராஜிநாமா செய்துவிட்டேன். எனக்கு ஏன் ஆர்.சி.பி. தேவைப்படுகிறது? நான் ராயல் சேலஞ்சஸ் மதுவைக் கூட குடித்ததில்லை என்றார். ஆர்.சி.பி. அணியின் மதிப்பு சுமார் 1 பில்லியன் டாலர் (ரூ. 8,600 கோடி) இருக்குமென தகவல்கள் தெரிவிக்கின்றன.



# இந்திய அணிக்கு ரூ.12.33 கோடி

ஆஸ்திரேலியா-தென் ஆப்பிரிக்கா மோதும் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வெல்லும் அணிக்கு ரூ.30.80 கோடி பரிசு தொகை வழங்கப்படும். இது முந்தைய சீசனை விட 125 சதவிகிதம் அதிகமாகும். 2-வது இடத்ததை பிடிக்கும் அணிக்கு ரூ.18.49 கோடி பரிசு கிடைக்கும். உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறாவிட்டாலும் இந்திய கிரிக்கெட் அணிக்கு ரூ.12.33 கோடி கிடைக்கும்.

இது கடந்த முறை சாம்பியனான ஆஸ்திரேலியா பெற்ற பரிசு தொகையை விட கூடுதலாகும். இந்திய அணி புள்ளிகள் பட்டியலில் 3-வது இடத்தைப் பிடித்து இருந்தது. 2 முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறி நியூசிலாந்து, ஆஸ்திரேலியா அணிகளிடம் தோற்று இந்தியா ஐ.சி.சி. கோப்பையை இழந்தது என்பது குறிப் பிடத்தக்கது. 4-வது இடத்தை பிடித்த நியூசிலாந்துக்கு ரூ.10.25 கோடி கிடைக்கும்.

# டொனால்டை முந்திய ரபாடா

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் தென்னாப்பிரிக்காவின் ககிசோ ரபாடா 5 விக்கெட்டுகளை எடுத்து அசத்தினார். இந்த அசத்தலான பந்துவீச்சின் மூலம் அந்நாட்டிற்காக அதிக விக்கெட்டுகள் எடுத்தவர்கள் பட்டியலில் ஆலன் டொனால்டை முந்தியுள்ளார். ஆலன் டொனால்டை விட குறைவான போட்டிகளில் இந்த மைல்கல்லை எட்டியுள்ளார்.

**தென்னாப்பிரிக்க அணிக்காக அதிக விக்கெட்டுகள்:**

1. **டேல் ஸ்டெயின் - 439 விக்கெட்டுகள் (93 போட்டிகள்)**
2. **ஷான் பொல்லாக் - 421 விக்கெட்டுகள் (108 போட்டிகள்)**
3. **மகாயா நிதினி - 390 விக்கெட்டுகள் (101 போட்டிகள்)**
4. **ககிசோ ரபாடா - 332 விக்கெட்டுகள் (71 போட்டிகள்)**
5. **ஆலன் டொனால்டு - 330 (72 போட்டிகள்)**

# வீராங்கனை மனு பாக்கர் ஏமாற்றம்

உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி ஜெர்மனியின் முனிச் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான 25 மீட்டர் பிஸ்டல் பிரிவின் இறுதி சுற்றுக்கு 8 பேரில் ஒருவராக நுழைந்த இந்திய நட்சத்திர வீராங்கனை மனு பாக்கர் பதக்க மேடையில் ஏற தவறினார்.

அவர் 20 புள்ளிகளுடன் 5-வது இடமே பிடித்தார். சீனாவின் யுஜி சன் 38 புள்ளிகளுடன் தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். இதே போல் ஆண்களுக்கான 50 மீட்டர் ரைபிள் மூன்று நிலை பிரிவில் இந்தியாவின் செயின் சிங் 407 புள்ளிகளுடன் 7-வது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

# சுப்மன் கில்லுக்கு பாராட்டு

இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் லீட்சில் வருகிற 20-ந் தேதி தொடங்குகிறது. முன்னதாக ரோகித் சர்மா ஓய்வு பெற்றுவிட்டதால், இந்திய கிரிக்கெட் அணி கேப்டனாக சுப்மன் கில் நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

இந்த நிலையில் சுப்மன் கில் குறித்து இந்திய முன்னாள் தலைமை பயிற்சியாளரும், தென் ஆப்பிரிக்க முன்னாள் வீரருமான கேரி கிர்ஸ்டன் கூறுகையில், ‘சுப்மன் கில், கிரிக்கெட் பற்றி ஆழமாக புரிந்து கொண்ட ஒரு புத்திசாலித்தனமான வீரர். சிறந்த கேப்டனாக உருவெடுப்பதற்குரிய அனைத்து பண்புகளும் அவரிடம் உள்ளது. சர்வதேச கிரிக்கெட் அரங்கில் தாக்கத்தை ஏற்படுத்த அவர் தயாராகி வருகிறார்’ என்றார்.



# சமூக வலைத்தள அரசியல் பணிகளை முன்னெடுக்க த.வெ.க. திட்டம்

**சென்னை, ஜூன் 13-**

நேரடி மக்கள் சந்திப்புடன், சமூக வலைத்தள அரசியல் பணிகளை முன்னெடுக்க த.வெ.க. தயாராகி வருகிறது.

சட்டசபை பொது தேர்தலை சந்திக்க த.வெ.க. முழு வீச்சில் தயாராகி வருகிறது. தேர்தலில் முக்கிய பங்களிப்பாக திகழும் பூத் கமிட்டிக்கு த.வெ.க. முழுமையாக நிர்வாகிகளை நியமித்து முடித்துள்ளது. அடுத்த கட்டமாக இணைய வழியில் மக்களை கவர விஜய் திட்டமிட்டு இருக்கிறார். இதற்காக சமூக வலைத்தளங்கள் வாயிலாக அரசியல் முன்னெடுப்புகளை தொடங்கி இருக்கிறார்.

சமூக ஊடகங்களை நிர்வகிக்க புதிய நிர்வாகிகளையும் விஜய் நியமித்துள்ளார். வாட்ஸ்-அப் குழுக்கள், பேஸ்புக், எக்ஸ் தளம் மூலம் கட்சியின் கொள்கைகள், எதிர்கால திட்டங்களை கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது. பூத் கமிட்டி வாரியாக குழுக்களை அமைத்து அவர்களுடன் உரையாடவும், கட்சி பணிகளை விரைவுபடுத்தவும் தேர்தல் காலக்கட்டத்தில் பலன் அளிக்கும் என்று விஜய் நம்புகிறார்.

விஜய் பங்கேற்கும் முக்கிய நிகழ்வுகளை நேரடியாக வலைத்தளங்கள் மூலம் ஒளி பரப்பவும், முக்கிய இடங்களில் உரிய அனுமதி பெற்று அகன்ற திரையில் ஒளிபரப்பவும் த.வெ.க. சார்பில் திட்டமிடப்பட்டு வருகிறது. வாட்ஸ்-அப் குழுக்கள் மூலம் நிர்வாகிகளிடம் தகவல் பரிமாற்றத்தை கொண்டு வந்து அதன் மூலம் உடனுக்குடன் கட்சி சார்ந்த திட்டங்களை மக்கள் மன்றத்திற்கு கொண்டு செல்ல விஜய் விரும்புகிறார். தற்போது அதற்கான பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது.

இது தவிர ஒவ்வொரு தொகுதியிலும் மக்களிடம் விஜய் காணொலி காட்சியாக சந்தித்து பேசும் வகையில் செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகிறது. நவம்பரில் கட்சி சின்னம் கிடைக்கும் பட்சத்தில் அதனை உடனடியாக கட்சியின் சமூக வலைத்தள குழுக்களில் பரப்பி, உடனுக்குடன் மக்கள் மத்தியில் கொண்டு செல்லவே இதற்கான ஏற்பாடு வகுக்கப்பட்டுள்ளது. இந்த அதிரடியான சமூக வலைத்தள அரசியல் எந்த வகையில், மக்கள் மன்றங்களில் த.வெ.க.வுக்கு கைகொடுக்கும் என்பது போக, போக தான் தெரியும்.

# விராட் கோலியிடம் கேப்டன்சியை கொடுத்திருப்பேன்: ரவி சாஸ்திரி

**மும்பை, ஜூன் 13-**

முடிவு எடுக்கும் அதிகாரத்தில் நான் இருந்திருந்தால், ஆஸ்திரேலியா தொடருக்குப் பிறகு விராட் கோலியிடம் கேப்டன்சியை கொடுத்திருப்பேன் என்று ரவி சாஸ்திரி கூறியுள்ளார்.

**கேப்டன்சி...**

ரோஹித் சர்மா டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு அறிவித்த பிறகு விராட் கோலியிடம் கேப்டன்சி அளித்திருக்க வேண்டும் என்று பலரும் அபிப்ராயப் பட்டனர். விராட் கோலியும் இங்கிலாந்து தொடரில் தன்னிடம் கேப்டன்சி கொடுத்தால் டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடரலாம் என்று நினைத்திருந்ததாகவே செய்திகள் வெளியாகின. ஆனால் அப்படித் திட்டம் எதுவும் இல்லாததால், கம்பீருடன் சேர்ந்து பணியாற்ற கோலிக்கும் மனதில்லை என்பதால் கோலி ஓய்வு அறிவித்து விட்டார் என்றே தெரிகிறது.

**பொற்காலம்...**

கோலியுடன் ரவி சாஸ்திரி 2017-21-ம் ஆண்டுகளில் பணியாற்றிய காலம் இந்திய கிரிக்கெட்டின் பொற்காலம் என்றே கூற வேண்டும். வெறும் ஐ.சி.சி. கோப்பை இல்லாததை மட்டும் வைத்து அதை எடைபோட முடியாது, ஏனெனில் ஐ.சி.சி. கோப்பைகளை வென்ற தோனி அயல்நாடுகளில் டெஸ்ட் போட்டிகளில் அவமானகரமான தோல்விகளுக்கு இட்டுச் சென்றார். அந்த அவமானகரங்களிலிருந்து விராட் கோலி-ரவி சாஸ்திரி கூட்டணி தான் மீட்டது.

**வருத்தம்...**

இந்நிலையில் விராட் கோலியின் ஓய்வு குறித்த விவகாரத்தை இன்னும் கொஞ்சம் நன்றாகக் கையாண்டிருக்கலாம் என்கிறார் ரவி சாஸ்திரி. “ஒருவர் போன பிறகுதான் அவர் எத்தனை பெரிய வீரர் என்ற உணர்வு ஏற்படும். அவர் ஓய்வு பெற்றது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது, அதுவும் அவர் போன விதம் என்னை மேலும் வருத்தமடையச் செய்துள்ளது. இந்த விவகாரத்தை இன்னும் கொஞ்சம் நன்றாகக் கையாண்டிருக்கலாம்.

**அசாதாரணமானது...**

அவரிடம் இன்னும் கொஞ்சம் நன்றாக பேசியிருக்கலாம். நானாக இருந்திருந்தால் ஆஸ்திரேலியா தொடருக்குப் பிறகே நேரடியாக அவரைக் கேப்டனாக்கியிருப்பேன். புள்ளி விவரங்கள் கோலியின் திறமைக்கு நியாயம் சேர்க்காது. டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தின் தூதராகச் செயல்பட்டார் விராட் கோலி. குறிப்பாக வெளிநாடுகளில் அவர் ஆடிய விதமும் வழிநடத்திய விதமும் அசாதாரணமானது. அவருடன் பணியாற்றியதில் எனக்கு மகிழ்ச்சி தான், வெற்றிகளின் அங்கமாக இருந்ததும் மகிழ்ச்சிதான்.” என்றார் ரவி சாஸ்திரி.

**தனக்கான நேரம்...**

அகார்க்கர் கூறுவது என்னவெனில் ஏப்ரலிலேயே அவர் முடித்துக் கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார் என்றார். மேலும் இது தான் தனக்கு நேரம் என்று கோலி முடிவெடுத்து விட்டார் என்றும் கூறினார் அகார்க்கர். ஆனால் என்ன சொன்னாலும் கம்பீரின் வருகை கோலியின் டெஸ்ட் வாழ்க்கையை முன் கூட்டியே முடித்து விட்டது என்றே தெரிகிறது.

# பி.எஸ்.எப். வீரர்களுக்கு மோசமான ரயில்: 4 உயரதிகாரிகள் சஸ்பெண்ட்

**புதுடில்லி, ஜூன் 13-**

எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு மிக மோசமான நிலையில் உள்ள ரயிலை அனுப்பியதற்கு, 4 ரயில்வே உயரதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப் பட்டனர்.

அமர்நாத் யாத்திரை பாதுகாப்புக்கு வடகிழக்கு மாநிலங்களில் இருந்து ஜம்மு-காஷ்மீருக்கு வீரர்களை ஏற்றிச் சென்ற ரயில் 72 மணி நேரம் தாமதமானதால், எல்லைப் பாதுகாப்புப் படை அதிருப்தி தெரிவித்துள்ளது. மேலும் ரயில் பெட்டிகளில் துர்நாற்றம் வீசும் கழிவறைகள், கிழிந்த இருக்கைகள், மேற்கூரை மற்றும் உடைந்த கதவு, ஜன்னல்களின் வீடியோ இணையத்தில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது.

எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு சிறப்பு ரயில் என்ற பெயரில் மிக மோசமான நிலையில் உள்ள ரயிலை அனுப்பியதற்கு, 4 ரயில்வே உயரதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப் பட்டனர். கடந்த மாதம் பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, அமர்நாத் யாத்திரை பாதுகாப்புக்காக எல்லைப் பாதுகாப்புப்படை அதிக எண்ணிக்கையிலான வீரர்களை அனுப்பியுள்ளது குறிப்பிடத் தக்கது.




மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பழங்காநத்தம் காளியம்மன் கோயில் மெயின் வீதி, நீலகண்டன் கோயில் தெரு, மருதுபாண்டியன் 2-வது தெரு மற்றும் வி.கே.பி.நகர் பகுதியில் புதிய தார் சாலை அமைக்கப்பட்டதை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் மூர்த்தி திறந்து வைத்தார். உடன் கலெக்டர் சங்கீதா, மேயர் இந்திராணி, ஆணையாளர் சித்ரா, துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், மதுரை, திண்டுக்கல் மண்டல தலைமை அலுவலகத்தில், பொது மேலாளர் முத்துகிருஷ்ணன் தலைமையில், குழந்தை தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான உறுதிமொழி எடுக்கப்பட்டது.

### மீன்பிடித்தடைக்காலம் நாளையுடன் நிறைவு:

## கடலுக்கு செல்ல தயார் நிலையில் பாம்பன், மண்டபம் பகுதியை சேர்ந்த மீனவர்கள்



**மண்டபம், ஜூன், 13-**

தமிழக அரசு விதிக்கப்பட்ட 61:நாட்கள் மீன்பிடி தடைக்காலம் நாளை சனிக்கிழமை நள்ளிரவுடன் நிறைவு பெறுகிறது இதனையடுத்து ராமேஸ்வரம் அருகே பாம்பன் மண்டபம் ஆகிய பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் தென் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீன்பிடி உபகரணங்களை சேகரித்துக் கொண்டும் படகுகளை கடலில் சோதனை ஓட்டம் நடத்தியும் தயார் நிலையில் வைத்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் மண்டபம் பகுதியில் 800 க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் சுழற்சி முறையில் மன்னார் வளைகுடா கடலான தென்கடலுக்கும், பாக்ஜல சந்தி கடலான வடகடலுக்கும் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் முடிவடைந்து இந்த மாதம் ஜூன் 15ஆம் தேதி முதல் மீன் பிடிக்க மீனவர்கள் கடலுக்கு செல்ல உள்ளனர்.

இதனால் மீனவர்கள் கடந்த 30 நாட்களுக்கு மேலாக விசைப் படகுகளை கரையில் ஏற்றி என்ஜின் பழுது பார்த்தல்,சேதமடைந்த படகுகளை சீரமைத்தல், பைபர் முலாம் பூசுதல் மீன்பிடி உபகரணங்களான வலைகளை சீரமைத்தல் உள்பட முழு பணிகளை தீவிரமாக செய்து வருகின்றனர்.அதுபோல பணிகள் முடிந்து வர்ணம் பூசப்பட்ட படகுகளை கடலில் இறங்கி சோதனை ஓட்டத்தில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை ஏறத்தாழ 500-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளை மீனவர்கள் சீரமைப்பு பணிகளை முடித்து மீன் பிடிக்க செல்ல தயாராகி கடலில் நிறுத்தி உள்ளனர். இதனால் பாம்பன், மண்டபம் கடலோரப் பகுதியில் பல்வேறு இடங்களில் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் தீவிரமாக சீரமைப்பு பணியில் ஈடுபட்டு வருவதால் பரபரப்பான சூழ்நிலை காணப்பட்டு வருகிறது.

பாம்பன் ,மண்டபம் ஆகிய கடலோரப் பகுதியில் ஏறத்தாழ 800-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளின் மீனவர்கள் மீன்பிடி தொழில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மீனவர்கள் மன்னார் வளைகுடா கடலோரப் பகுதியான தென்கடலில் 400 மேற்பட்ட விசைப்படகுகளிலும் அதுபோல பாக்ஜலசந்தி கடலோரப்பகுதியான வடக்கு கடலில் 300 க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் வாரத்தில் மூன்று நாட்கள் சுழற்சி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இந்த மீன் பிடிக்கும் முறையே மீனவர்கள் பல ஆண்டுகளாக பின்பற்றி வருகின்றனர். இந்த நிலையில் மீன்பிடித்தடைக்காலம் முடிந்து ஜூன் மாதம் 15 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மீனவர்கள் மீன் பிடிக்க செல்ல வேண்டும். தமிழக கடலோரப் பகுதியில் ராமநாதபுரம் மாவட்டத்தில் பாக் ஜல சந்தி கடல் பகுதியில் மீன் பிடிக்க மீனவர்கள் அதிகமான ஆர்வம் காட்டுவார்கள் அதற்கான காரணம் வெளிநாட்டுக்கு உணவுக்காக ஏற்றுமதி செய்யப்படும் இறால் மீன்கள், கணவாய் மீன்கள், நண்டு உள்ளிட்ட மீன்களின் வரத்துகள் அதிகமாக இருக்கும். இதற்கிடையே மீன்பிடி தடைக்காலம் முடிந்து நாளை முதல் கடலுக்கு செல்லும்போது மீனவர்கள் அதிகமான மீன்கள் கிடைக்கும் என எதிர்பார்ப்புடன் செல்வார்கள். இந்த நிலையில் மீன்பிடி தடைக்காலம் முடிவடைந்து மண்டபம் பகுதியில் முதல்நாள் சுழற்சி முறையில் தென்கடலுக்கு பாம்பன்,மண்டபம் மீனவர்கள் தெற்குவாடி கடலோரப் பகுதியில் இருந்து மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல தயாராகி வருகின்றனர்.

மீன் பிடித்தடைக்காலம் முடிந்து ராமேசுவரம் மீனவர்கள் பாக்ஜலசந்தி கடலோரப் பகுதிக்கு நாளை மறுநாள் ஜூன் 16-ம் தேதி திங்கட்கிழமை காலையில் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல உள்ளனர்.

இதனால் மீன்பிடிக்க தேவைப்படும் மீன்பிடி உபகரணங்களும் மற்றும் படகுகளை சீரமைத்து கடலில் சோதனை ஓட்டம் நடத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் மாணவர்களுக்கான உயர்கல்வி ஆலோசனை மையம்

**ராமநாதபுரம், ஜூன் 13-**

ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் மாணவ மாணவிகள் உயர்கல்வி கற்பதற்கான ஆலோசனை மையம் அமைக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங்காலோன் தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு முடித்த அனைத்து மாணவர்களும், உயர் கல்வியினை தொடர ஏதுவாக தக்க ஆலோசனை வழங்கும் பொருட்டு மாவட்ட நிர்வாகம் சார்பில் கலெக்டர் அலுவலகத்தில் மாணவர்களுக்கான உயர் கல்வி ஆலோசனை மற்றும் உதவி மையம் தொடங்கப்பட்டு கடந்த 19-ந் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

இப்பணிக்கு பிரத்தேயகமாக இரண்டு தொலைபேசி எண்கள் ( 04567 -228016 மற்றும் 04567-228021) செயல்பட்டு வருவதுடன், தகுதியான ஆலோசகர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.


பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மேற்கண்ட தொலைபேசி எண்களிலோ அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாத்தில் தரைதளத்தில் உள்ள உயர் கல்வி உதவி மையம் அலுவலகத்தில் நேரடியாகவோ தொடர்பு கொண்டு உயர் கல்வி தொடர்பாக தங்களுக்கு ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் தெளிவு பெற்று பயனடையலாம். இந்த தகவலை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

### நத்தம் அருகே

## கரையம்மன் கோவில் திருவிழா

**நத்தம், ஜூன் 13-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே நடுமண்டலம் கிராமம் ஒத்தினிப்பட்டியில் கரையம்மன் கோவில் திருவிழா நடந்தது. இதையொட்டி நேற்று முன்தினம் இரவு கரையம்மன் ஊர்வலமாக கோவிலுக்கு அழைத்து வரப்பட்டது. தொடர்ந்து கோவிலுக்குச் சென்ற அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும், பூஜைகளும் நடந்தது.பின்னர் பக்தர்கள் பால்குடம், அக்னி சட்டி, அலகு வேல் குத்துதல், காவடிகள் எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.தொடர்ந்து நேற்று மாலை அம்மன் பக்தர்கள் புடைசூழ பூஞ்சோலை செல்லும் நிகழ்ச்சி நடந்தது. இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர்.விழாவிற்கான ஏற்பாடுகளை ஒத்தினிப்பட்டி, லெட்சுமணபுரம், பஞ்சயம்பட்டி, ஒ.புதூர் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.



### முதுகுளத்தூர் அருகே புதிய நூலக கட்டிடம்:

## ஆணையாளர் ஜானகி தொடங்கி வைத்தார்



**முதுகுளத்தூர், ஜூன் 13-**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே தட்டானேந்தல் கிராமத்தில் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை சார்பில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட புதிய நூலகக் கட்டிடத்தை தமிழக முதல்வர் காணொலி காட்சி வழியாக திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து தட்டானேந்தல் கிராமத்தில் புதிய நூலகக் கட்டிடத்தில் நடைபெற்ற விழாவில் முதுகுளத்தூர் ஒன்றிய ஆணையாளர் ஜானகி தலைமை தாங்கி குத்துவிளக்கு ஏற்றிவைத்தார். நூலகர் சு.சுடலைக்கண்ணு வரவேற்றுப்பேசினார்.

மேலும் விழாவில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பால தண்டாயுதபாணி ஊ.ஒ.தொ.பள்ளி தலைமை ஆசிரியை .ஜெலின் ஆரோக்கியமேரி மத்திய திமுக ஒன்றிய செயலாளர் கோவிந்த ராஜ் கமுதி நூலகர் கண்ணதாசன் மற்றும் கமுதி மைய நூலகர்கள் இராமேஸ்வரி விஜயராணி உமா மகேஸ்வரி பிரின்ஸ்டன் ஐஸ்வர்யா சந்தானசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும். கிராம பொதுமக்கள் ராளமானோர் பங்கேற்றனர். முடிவில் ஆனந்த் நன்றி கூறினார்.

### பரமக்குடி அருகே

## குளவி கொட்டியதில் 18-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதி



**பரமக்குடி, ஜூன் 13-**

பரமக்குடி அருகே மேலப்பெருங்கரை கிராமத்தில் குளவி கொட்டியதில் 18-க்கும் மேற்பட்டோர் காயத்துடன் பரமக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அருகே உள்ள மேலப்பெருங்கரை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் 100 நாள் வேலைக்காக சென்றுள்ளனர். அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்த பொழுது திடீரென்று குளவிகள் 40 பேரை கொட்டியது. இதில் 18-க்கு மேற்பட்டோர் காயங்களுடன் பரமக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட உள்ளனர். இதில் ஒரு முதியவர் மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

## அரசு போக்குவரத்து கழகம் விருதுநகர் மண்டல புதிய பொது மேலாளர் பொறுப்பேற்றார்

**விருதுநகர், ஜூன் 13-**

விருதுநகர் மண்டல போக்குவரத்து அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மதுரை கோட்டம், விருதுநகர் மண்டலத்தில் புதிய பொதுமேலாளராக கலைவானன் பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சேலம் மண்டலத்தில் துணை மேலாளராக (வணிகம்) பணியாற்றியிருக்கிறார்.

பின்னர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மதுரை கோட்டம் விருதுநகர் மண்டல அலுவலகத்தில் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதி மொழி விருதுநகர் மண்டல புதிய பொதுமேலாளர் கலைவானன் தலைமையில் ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில் போக்குவரத்துத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 3-வது வார்டு எண்.52 அவ்வை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் திறந்து வைத்தார். உடன் மேயர் இந்திராணி, ஆணையாளர் சித்ரா, மண்டலத்தலைவர் பாண்டிச்செல்வி, கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் பாஸ்கரன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

### அருப்புக்கோட்டையில்

## உலக குழந்தை தொழிலாளர் ஒழிப்பு தினம்: நீதிபதிகள் பங்கேற்பு



**அருப்புக்கோட்டை, ஜூன் 13-**

அருப்புக்கோட்டை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உலக குழந்தைகள் தொழிலாளர் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு அருப்புக்கோட்டை வட்ட சட்ட பணிகள் குழு மற்றும் விருதுநகர் மாவட்ட தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை இணைந்து ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தின விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் அருப்புக்கோட்டை சார்பு நீதிபதி சதீஷ் தலைமை தாங்கி எழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ஆனந்தவள்ளி , கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி சிவரஞ்சனி, குற்றவியல் நடுவர் நீதிபதி ஜெயபிரதா, வழக்கறிஞர்கள் சங்கச் செயலாளர் லாவண்யா, பொருளாளர் பாலாஜி, வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகள், மூத்த வழக்கறிஞர்கள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை ஆய்வாளர் உமா மகேஸ்வரன் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிராக விழிப்புணர்வு கையெழுத்திட்டனர். நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் நீதிமன்ற அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### முருக பக்தர்கள் மாநாட்டில் மாதிரி அறுபடை வீடுகள்:

## ஐகோர்ட்டில் அர்ச்சகர்கள் சங்கம் வழக்கு

**மதுரை, ஜூன் 13-**

மதுரை முருக பக்தர்கள் மாநாட்டில் மாதிரி அறுபடை வீடுகள் அமைப்பதற்கு எதிராக அனைத்து சாதி அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் இடையீட்டு மனு தாக்கல் செய்யதுள்ளது.

மதுரை அம்மா திடலில் ஜூன் 22-ல் முருக பக்தர்கள் மாநாடு நடைபெறுகிறது. இதையொட்டி மாநாட்டு வளாகத்தில் மாதிரி அறுபடை வீடுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அறுபடை வீடுகள் அமைக்க போலீஸார் அனுமதி மறுத்த நிலையில் அதற்கு எதிராக இந்து முன்னணி சார்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் மாதிரி அறுபடை வீடுகள் அமைக்கலாம். ஆனால் பூஜைகள் நடத்தக்கூடாது என உத்தரவிடப்பட்டு அடுத்த விசாரணை இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்து முன்னணி சார்பில், மாதிரி அறுபடை வீடுகள் அமைக்க அனுமதி வழங்கக்கூடாது என அனைத்து சாதி அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கத்தலைவர் அரங்கநாதன் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் இடையீட்டு மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது: அறுபடை வீடுகளில் குறிப்பிட்ட ஆகம முறைப்படியே பூஜை செய்ய வேண்டும். முருகனின் அறுபடை வீடுகளில் அறங்காவலர் குழு அனுமதி பெற்று, பாலாலயம் அமைத்து மூலவருக்கு உரிய பூஜைகள் செய்து, உற்சவரை மட்டுமே வெளியே கொண்டு வர முடியும். இதனால் இந்து முன்னணி அமைக்கும் அறுபடை வீடுகளில் மூலவர் சிலை அமைக்கவே முடியாது.

உற்சவர் சிலையும் ஆகமப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடத்திய பிறகே பூஜை செய்ய முடியும்.

மாதிரி அறுபடை வீடுகளில் இருவேளை பூஜை என்பது ஆகமத்துக்கு முரணானது.

மாதிரி அறுபடை வீடுகள் அமைக்க இந்து சமய அறநிலையத்துறையிடம் ஒப்புதல் பெறவில்லை. மதுரை மாநகராட்சி, தீயணைப்புத்துறை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமும் அனுமதி பெறவில்லை. மாதிரி அறுபடை வீடுகள் அமைத்து பூஜை செய்ய அனுமதிப்பது கோடிக்கணக்கான முருக பக்தர்களின் நம்பிக்கையை அவமதிப்பதாகும். ஆன்மிகத்தை அரசியலுக்கு பயன்படுத்தக் கூடாது. கடவுளை கட்சிக்குப் பயன்படுத்தக்கூடாது. எனவே முருக பக்தர்கள் மாநாட்டில் மாதிரி அறுபடை வீடுகள் அமைக்க தடை விதித்து, இந்து முன்னணியின் மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

## திருமங்கலம் நகர் பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகளை விரைந்து முடிக்க மக்கள் கோரிக்கை

**திருமங்கலம், ஜூன் 13-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் பேருந்து நிலையத்தில் ரூ.2.77 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மேம்பாட்டு பணிகளை விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்திடுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



திருமங்கலம் நகரிலுள்ள அறிஞர் அண்ணா பவள விழா பேருந்து நிலையத்தில் பயணிகள் வசதிக்கென மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்காக கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.77 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் அமைத்தல், கடைகள் கட்டுதல், கழிப்பறைகள் கட்டுதல், நுழைவு வாயிலில் ஆர்ச், சைக்கிள் ஸ்டாண்ட் மற்றும் சிசிடிவி கேமராக்கள் அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. சுமார் 45 நாட்களில் பணிகள் அனைத்தையும் முடித்து விட திட்டமிடப்பட்டு பணிகள் துவங்கின. இதற்காக கடந்த மே 5ம் தேதி முதல் தெற்கு தெரு பகுதியில் உள்ள பெட்ரோல் பங்க் அருகில் தற்காலிகமாக இடம் மாற்றம் செய்யப்பட்டு அங்கு பயணிகளுக்கு தேவையான குடிநீர், கழிப்பறை, நிழற்குடை, மின் வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு அங்கிருந்து பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. தற்காலிக பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் அனைத்தும் இயக்கப்பட்டு வரும் நிலையில் திருமங்கலம் நகரில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் பெரும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர். குறிப்பாக மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள மதுரை ரோடு, விருதுநகர் ரோடு, உசிலை சாலை ஆகிய பகுதிகளில் வாகன போக்குவரத்து அதிகரித்து பொதுமக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். போக்குவரத்து போலீசார் தீவிரமாக பணியாற்றியும் போக்குவரத்து நெரிசலை தீர்க்க முடிவதில்லை. எனவே திருமங்கலம் நகரில் நிலவிடும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு திருமங்கலம் நகர் பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டு பணிகளை கால தாமதமின்றி விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்திட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், சேலத்தில் 880 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா மற்றும் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நூலகக் கட்டிடம் உள்ளிட்ட 509 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 200 கோடியே 26 லட்சம் ரூபாய் செலவில் 225 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தார். இந்த விழாவில், அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இரா.ராஜேந்திரன், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர் இராமச்சந்திரன், துணை மேயர் சாரதா தேவி, மாவட்ட கலெக்டர் பிருந்தா தேவி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை அண்ணா அறிவாலயத்தில்

# 3 தொகுதி தி.மு.க. நிர்வாகிகளுடன் முதல்வர் ஸ்டாலின் இன்று சந்திப்பு

**சென்னை, ஜூன் 13-**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் 3 தொகுதி தி.மு.க. நிர்வாகிகளை முதல்வர் ஸ்டாலின் இன்று சந்திக்கிறார்.

மதுரையில் கடந்த 1-ம் தேதி நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில் பேசிய அக்கட்சியின் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், ஜூன் மாதம் முதல் வாரத்தில் இருந்து, என்னுடைய பணி என்னவென்றால், தி.மு.க. நிர்வாகிகளை தொகுதி வாரியாக, அண்ணா அறிவாலயத்தில் நான் சந்திக்க இருக்கிறேன். அப்போது இன்னும் விரைவாக, ஒன் டூ ஒன் பேசுவோம் என்றார்.

அந்த வகையில், "உடன் பிறப்பே வா" என்ற தலைப்பில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) முதல், தி.மு.க. நிர்வாகிகளை தொகுதி வாரியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திக்க இருக்கிறார். சிதம்பரம், விழுப்புரம், உசிலம்பட்டி தொகுதிகளை சேர்ந்த நிர்வாகிகளை முதல் நாளில் அவர் சந்திக்கிறார்.



● துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நேற்று தலைமைச் செயலகத்தில், தி.மு.க. சார்பில் போட்டியிட்டு, மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியின்றி வெற்றி பெற்ற மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன், தி.மு.க.வை சேர்ந்த வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், ரொக்கையா மாலிக் (எ) கவிஞர் சல்மா ஆகியோர் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டப்பேரவை கூடுதல் செயலாளருமான சுப்பிரமணியத்திடம் இருந்து வெற்றி பெற்றதற்கான சான்றிதழ்களை பெற்று கொண்டனர். இந்நிகழ்வில் அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



● தலைமைச் செயலகத்தில் நேற்று, அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு, மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியின்றி வெற்றி பெற்ற அ.தி.மு.க. வேட்பாளர் இன்பதுரை முன்னாள் அமைச்சர் ஜெயபால் முன்னிலையில் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டப்பேரவை கூடுதல் செயலாளருமான சுப்பிரமணியத்திடம் இருந்து வெற்றி பெற்றதற்கான சான்றிதழை பெற்று கொண்டார்.

### தமிழர்களின் தொன்மையை அழிக்க மத்திய அரசு முயற்சி:

# டெல்லியில் இருந்து தமிழ்நாட்டை ஆட்சி செய்ய அனுமதிக்க மாட்டோம்

## சேலத்தில் நடந்த அரசு விழாவில் முதல்வர் ஸ்டாலின் ஆவேசம்

**சேலம், ஜூன் 13-**

தமிழர்களின் தொன்மையை அழிக்கவும், மறைக்கவும் மத்திய அரசு முயற்சிப்பதாக சேலத்தில் நடந்த அரசு விழாவில் குற்றஞ்சாட்டியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், டெல்லியில் இருந்து தமிழகத்தை ஆட்சி செய்ய ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், முதல்வர் ஸ்டாலின் பங்கேற்று, ரூ.1,649 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: மதுரையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியபோது, மத்திய அரசின் திட்டங்களை, தமிழக அரசு மடைமாற்றம் செய்து விட்டதாக ஆட்சியை குறை சொல்லி, விமர்சனம் செய்துள்ளார். அதனால் இந்த கூட்டத்தில் அரசியல் பேச வேண்டிய கட்டாயத்தில் பேசுகிறேன்.

குடிநீர் திட்டம், பிரதமரின் வீடு கட்டும் திட்டம் என மத்திய அரசின் திட்டங்களுக்கு நிதி போதாததால், தமிழக அரசு 50 சதவீத நிதியை கூடுதலாக ஒதுக்கி அந்த திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இந்த நிலையில் எந்த அடிப்படையில் மடைமாற்றம் என்று குறை சொல்கிறார். தமிழகத்துக்கு மத்திய அரசு இதுவரை எந்த சிறப்புத் திட்டங்களையும் அறிவிக்கவில்லை, நிதியும் கொடுக்கவில்லை. மதுரையில் 10 பத்து ஆண்டுகளாக எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. அது என்ன மருத்துவமனையா? விண்வெளி ஆராய்ச்சி நிலையமா? என்று நேரில் சென்று அமித்ஷா பார்த்தாரா?.

ஆனால் திமுக ஆட்சிக்கு வந்த நான்கு ஆண்டுகளில், கலைஞர் நூற்றாண்டு நூலகம், ஜல்லிக்கட்டு அரங்கம், கீழடி அருங்காட்சியகம், என பல திட்டங்களை செய்துள்ளோம். பாஜக அரசு மத்தியில் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்துள்ள நிலையில், தமிழகத்துக்கு என்ன திட்டத்தை கொண்டு வந்தீர்கள்?. அதே போல் மத்திய அமைச்சர் ஷெகாவத், கீழடி அறிவியல் ஆய்வறிக்கையை திருத்த வேண்டும் என்று சொல்கிறார்.

தமிழகத்தில் இரும்பின் தொன்மையை ஆய்ந்து தமிழக அரசு அறிக்கையை வெளியிட்டது. அதை பாராட்டவில்லை என்றாலும் பரவாயில்லை, அங்கீகரிக்கவாவது செய்தீர்களா?. தமிழகத்தின் தொன்மையையும் பண்பாட்டையும் அழிக்க தான் மத்திய அரசு முயற்சிக்கிறது. இதையெல்லாம் தட்டி கேட்க எதிர்க்கட்சித் தலைவருக்கு துணிவு இல்லை. மத்திய அரசின் தலையாட்டி பொம்மையாக இருக்கிறார்.

தமிழகத்தையும் தமிழர் பண்பாட்டையும் அழிக்க நினைக்கும் இந்த கூட்டணியை அதனால்தான் தமிழக மக்கள் புறக்கணிக்கிறார்கள், பதவியை காப்பாற்றிக் கொள்ள வெளிப்படையாக அன்று கூட்டணி வைத்திருந்தார். ஆனால் எந்த திட்டங்களையாவது அவர் தமிழகத்துக்கு கொண்டு வந்தாரா?. தமிழகத்தில் பாஜக கூட்டணி ஆட்சி அமையும் என்று அமித்ஷா கூறுகிறார். மக்கள் ஏமாற மாட்டார்கள். தமிழக மக்கள் சுயமரியாதை உள்ளவர்கள். டெல்லியில் இருந்து வருபவர்களை தமிழகத்தை ஆள ஒருபோதும் விட மாட்டோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# தண்ணீர் இல்லாத கிணற்றில் யார் குதிப்பார்கள்? அமைச்சர் பெரியசாமி

**திண்டுக்கல், ஜூன் 13-**

தி.மு.க. கூட்டணியில் இருந்து யாரும் போக மாட்டார்கள் என்று அமைச்சர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் அருகே கலைஞர் கனவு இல்ல திட்ட பயனாளிகளுக்கு பணி ஆணைகளை அமைச்சர் இ. பெரியசாமி வழங்கினார். பின்னர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது:-

தி.மு.க. தேர்தல் வாக்குறுதிகள் அத்தனையும் ஒவ்வொன்றாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சட்டமன்றத்தில் ஒவ்வொரு துறையிலும் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. சண்முகம் கூட்டணியில் அதிக இடங்கள் வேண்டும் என கூறியுள்ளார். அது அவரின் உரிமை. 7 ஆண்டு காலமாக ஒரு தூசி கூடபடாமல் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கூட்டணியை பார்த்து வருகிறார்.

தி.மு.க. கூட்டணியில் இருந்து யாரும் போக மாட்டார்கள். கண்கள் தெரியும் போதே தண்ணீர் இல்லாத பாறை கிணற்றில் எப்படி விழுவார்கள். அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 100க்கு 100 சதவீதம் வந்துள்ளது என்றால் படிப்பதற்கு ஆர்வமாக வருகின்றனர். ஆட்சியில் யாரும் இதுவரை பங்கு கேட்டது இல்லை. கடந்த 6 முறை ஆட்சிக்கு வந்துள்ளோம். 7 வது முறையும் தி.மு.க.வில் மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக வருவார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மாநிலங்களவை உறுப்பினர்களாக 6 பேரும் போட்டியின்றி தேர்வு

**சென்னை, ஜூன் 13-**

மாநிலங்களவை உறுப்பினர்களாக ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன், தி.மு.க.வின் வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம், அ.தி.மு.க.வின் இன்பதுரை மற்றும் தனபால் ஆகிய 6 பேரும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதுடன், அதற்கான சான்றிதழையும் பெற்றுக் கொண்டனர். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை பெற்றுக்கொண்டனர்.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்வானவர்களில் 6 பேரின் பதவிக்காலம் அடுத்த மாதம் முடிவடைகிறது. இதையடுத்து, அந்த 6 இடங்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடத்தும் அதிகாரியாக தமிழக சட்டப்பேரவை செயலக கூடுதல் செயலர் சுப்பிரமணியம், உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியாக இணை செயலர் ரமேஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். எம்எல்ஏக்கள் பலத்தின் அடிப்படையில் தி.மு.க. சார்பில் 4 பேரும், அ.தி.மு.க. சார்பில் 2 பேரும் போட்டியிட்டனர்.

தொடர்ந்து, கடந்த ஜூன் 2-ம் தேதி முதல் 9-ம் தேதி வரை வேட்பு மனுக்கள் பெறப்பட்டன. ஜூன் 10-ம் தேதி வேட்பு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டன. இதில், சுயேச்சை வேட்பாளர்கள் மனுக்கள், எம்எல்ஏக்கள் முன்மொழிவு இல்லாத காரணத்தால் நிராகரிக்கப்பட்டன. தி.மு.க., அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட 6 பேரது மனுக்கள் ஏற்கப்பட்டன. தொடர்ந்து, நேற்று (ஜூன் 12) மாலை 3 மணிவரை மனுக்களை வாபஸ் பெற கால அவகாசம் வழங்கப்பட்டது. அவகாசம் முடிவடைந்த நிலையில், வேறு யாரும் போட்டியிடாத நிலையில், வெற்றி பெற்றவர்கள் தொடர்பான விவரங்களை, தேர்தல் நடத்தும் அதிகாரி சுப்பிரமணியம் வெளியிட்டார்.

இதுகுறித்து, சுப்பிரமணியம் கூறியது: "தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்டு தற்போது உறுப்பினர்களாக உள்ள அன்புமணி ராமதாஸ், மு.சண்முகம், என்.சந்திரசேகரன், மு. முகமது அப்துல்லா, பி.வில்சன், வைகோ ஆகியார் பதவிக்காலம் ஜூலை 24ம் தேதியுடன் முடிவடைகிறது. இந்த காலியிடங்களை நிரப்புவதற்கு தமிழக சட்டப்பேரவையில் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களை வாக்காளர்களாக கொண்டு மாநிலங்களவைக்கு தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் 17 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

தி.மு.க.வைச் சேர்ந்த பி.வில்சன், ராஜாத்தி (கவிஞர் சல்மா) , எஸ்.ஆர்.சிவலிங்கம், மக்கள் நீதி மய்யத்தைச் சேர்ந்த கமல்ஹாசன் ஆகியோர் தலா 2 வேட்பு மனுக்களும், அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஐ.எஸ் இன்பதுரை, ம.தனபால் ஆகியோர் தலா 2 வேட்பு மனுக்கள், சுயேச்சை வேட்பாளர்களான அக்னி ஆழ்வார், கண்டே சயன்னா, ரே. கந்தசாமி, மு.சுப்பிரமணியன், குபத்மராஜ் து.கு.மேஷக் கிருபாகரன், கே.பி.எம். ராஜா ஆகியோர் தலைா ஒரு வேட்பு மனுக்களை அளித்திருந்தனர். வேட்புமனுக்கள் பரிசீலனை கடந்த ஜூன் 10ம் தேதி நடைபெற்றது. நேற்று மாலை மூன்று மணி வரை வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தவர்கள் யாரும் மனுக்களை திரும்பப் பெறவில்லை.

நிரப்பப்பட வேண்டிய 6 காலியிடங்கள் எண்ணிக்கையும் சட்டப்படி செல்லத்தக்க வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதையடுத்து, மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படியும், தேர்தல் விதிகளின் படியும் தி.மு.க.வைச் சேர்ந்த வேட்பாளர்கள் பி.வில்சன், ராஜாத்தி , எஸ்ஆர் சிவலிங்கம், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், அ.தி.மு.க.வைச் சேர்ந்த இன்பதுரை, தனபால் ஆகியோர் போட்டியின்றி முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்," என்று அவர் அறிவித்தார்.

இதையடுத்து, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில், வெற்றி பெற்றதற்கான சான்றிதழை, தேர்தல் நடத்தும் அதிகாரி சுப்பிரமணியத்திடம் இருந்து, தி.மு.க. சார்பில் போட்டியிட்ட கமல்ஹாசன், பி.வில்சன், சிவலிங்கம் மற்றும் ராசாத்தி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், வளர்மதி ஆகியோர் முன்னிலையில், அ.தி.மு.க. வேட்பாளர்கள் ஐ.எஸ்.இன்பதுரை மற்றும் தனபால் ஆகியோர் தங்கள் வெற்றிச்சான்றிழை பெற்றனர். புதிதாக மாநிலங்களவைக்கு தேர்வானவர்கள், ஏற்கெனவே தேர்வானவர்களின் பதவிக்காலம் முடிந்ததும், மாநிலங்களவையில் உறுதிமொழி ஏற்று எம்.பி-களாக பணியாற்றுவார்கள்.

# அகமதாபாத்தில் இருந்து 2 சிறப்பு ரயில்கள் இயக்கம்

**அகமதாபாத், ஜூன் 13-**

அகமதாபாத் விமான நிலையத்தில் தற்காலிகமாக சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதால், பயணிகளின் வசதிக்காக இரண்டு சிறப்பு ரயில்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக மேற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

அகமதாபாத்தில் இருந்து லண்டன் புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் நேற்று பிற்பகல் கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த நிலையில் மேற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக் குறிப்பில், "விமான விபத்து நடந்த பகுதிக்கு மேற்கு ரயில்வேயின் பேரிடர் மீட்புக் குழு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ரயில்வேவின் மருத்துவக் குழுவும் ரயில்வே காவலர்களும் மீட்புப் பணிக்காக சென்றுள்ளனர். தற்போது அகமதாபாத்தில் இருந்து டில்லி மற்றும் மும்பைக்கு ஒரு சிறப்பு ரயில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப கூடுதல் ரயில்கள் அகமதாபாத்தில் இருந்து இயக்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



● இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அயனாவரம், பெரியார் சாலை, வடக்கு மாடவீதி திட்டப் பகுதியில் மிகவும் பழுதடைந்த 196 அடுக்குமாடி குடியிருப்புகளில் முதற்கட்டமாக 66 பயனாளிகளுக்கு தற்காலிக ஒதுக்கீடு ஆணை மற்றும் கருணைத் தொகை ரூ.24,000-த்தை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் நடைபெற்ற குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளும் விழிப்புணர்வு பேரணியை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் வீர ராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.